





















25வது வெள்ளி விழா 2021

UTHAYAN உதயன்

சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் அமர செய்தி இதழ்

$1.00

416-752-1524
416-752-6703

உதயம் 1304 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 2, 2021

## "Friends, we're facing a very serious situation" - Ontario Premier Doug Ford

# மீண்டும் நான்கு வாரங்களுக்கு முடங்குகின்றது ஒன்றாரியோ மாகாணம்



## நண்பர்களே! நாம் மிகவும் மோசமானதும் ஆபத்தானதுமான கட்டத்தில் உள்ளோம் என்கிறார் மாகாண முதல்வர் டக் போர்ட்

"நண்பர்களே! எமது மாகாணம் மிகுந்த மோசமானதும், ஆபத்தானதுமான கட்டத்தில் உள்ளோம். எனவே அனைவரது நலன் கருது ஒன்றாரியோ மாகாணத்தின் அனைத்தும் எதிர்வரும் நான்கு வாரங்களுக்கு முடக்கப்படும் நிலையை நாம் அமுல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது"

இவ்வாறு ஒன்றாரியோ மாகாண பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்"கில் நேற்று பிற்பகல் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், மேற்படி முடக்கம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தெரிவித்தார். *(உள்ளே 5ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

## இலங்கையின் போர்க் குற்றவாளிகள் மீதான பயணத்தடையையும் இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணையையும் வலியுறுத்தும் கனடிய பிரதான எதிர்க்கட்சி


*மைக்கல் சொங்*


*கார்னட் ஜீனியசு*

கனடாவின் பிரதான எதிர்கட்சியான கன்சவேட்டிவ் கட்சியானது இலங்கையில் பாரிய மனித உரிமைக்குற்றங்களுக்கு காரணமானவர்கள் மீதான பயணத்தடையை விதிக்குமாறு கனடிய லிபரல் அரசைக் கோரியுள்ளது. கனடா-வில் நடைமுறையில் உள்ள மக்கன்சி சட்டவிதிகளின் பிரகாரம் அதனை உடன் அமுல் செய்யுமாறு அது வலியுறுத்துகிறது. இச்சட்டவிதிகள் சம்மந்தப்பட்டவர்கள் மீதான மேலும் பல நடவடிக்கைகளுக்கும் வலிகோ-லும் என்பதுவும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. கனசவேட்டிவ் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான நிழல் அமைச்சர் மைக்கல் சொங்கும் சர்வதேச அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளுக்கான நிழல் அமைச்சர் கார்னட் ஜீனியசும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

*(உள்ளே 5ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

## எம்மை விட்டு பிரிந்த சென்ற தமிழ் மண்ணின் காவலர்கள் இருவரது மறைவிற்காக கனடா உதயன் ஊடகக் குழுமம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது


*ஆண்டகை இராப்பு ஜோசப்*


*மரியசேவியர் அடிகளார்*

நேற்று ஏப்ரல் மாதம் 1ம் திகதி தாயகத்தில் எம்மை விட்டு பிரிந்த சென்ற தமிழ் மண்ணின் காவலர்கள் இருவரது மறைவிற்காக கனடா உதயன் ஊடகக் குழுமம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது. ஆயர் ஆண்டகை இராப்பு ஜோசப் என்னும் காக்கும் காவலர் மற்றும் மரி-யசேவியர் அடிகளார் என்னும் கலைக் காவலர் ஆகியோரது இழப்புக்கள் தொடர்பான கட்டுரைகள் உள்ளே காட்சியளிக்கின்றன.











HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புனித வெள்ளி
விசேஷ உணவுகள்
கதம்ப சாம்பார், தக்காளி ரசம், காய்கறி கூட்டு, உருளைக் கிழங்கு பிரட் பொரியல், கோஸ் பட்டாணி பொரியல், பன்னீர் பட்டர் மசாலா, வத்தக்குழம்பு, சோயா பிரியாணி, மோர் மிளகாய், அடை பிரதமன், அன்னாசி பழம் கேசரி, வடை, தயிர், ரைத்தா, மாங்காய் ஊறுகாய், பூரி/சப்பாத்தி, அப்பளம்.
Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA
SCARBOROUGH
416 293 7755
MISSISSAUGA
905 290 0769
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9

உதயன் கதிரோட்டம்

# மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையை பீடித்த கொடிய நோய்க்கு காரணமான சூழ்ச்சி

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயரின் இறுதி நல்லடக்கம் திங்கட்கிழமை நடைபெறுகின்றது

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அவர்களின் மறைவு தமிழினத்திற்கு பேரிழப்பாகும். மறைந்த ஆயர் அவர்கள் தமிழ் மக்களின் அனைத்த தளங்களிலும் நின்று உரத்த குரலாக எழுப்பிய நியாயங்களை அப்போது செவிமடுக்க அரசு தரப்பு முன்வரவில்லை. அவர் வெளியிட்ட கருத்துக்களை அரசாங்கம் ஒரு நீதியான குரல் என்று கணிக்கத் தவறிவிட்டது.

தமிழர்களின் நலனுக்காக அவர்கள் குரல் கொடுக்கின்றார் என்பதை மறந்து தனது போக்கில் அரசாங்கம் சென்று கொண்டிருந்தது.

யுத்த காலத்தில் இன, மத , மொழி பேதம் பாராமல் மனிதம் மட்டுமே மேன்மை என கருதி அனைத்து மக்களுக்குமான சேவைகளை வழங்கியவர் மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை.

ஆண்டகை அவர்கள் நீண்ட கால சுகயீனம் காரணமாக நேற்று அதிகாலையில் இயற்கை எய்தினார். அவரது இழப்பானது தமிழ் சமூகத்திற்கு பேரிழப்பாக அமைந்துள்ளது.

ஆயர் அவர்கள் அனைத்து மதங்களையும் ஒரே மாதிரியாகவே பார்த்து வந்துள்ளார். இதனால் மதத்தலைவர்கள் பிற மதத்தவர்களின் அன்பை அதிகமாக பெற்றவர் இராயப்பு ஜோசப் ஆண்டகை என்றால் அது மிகையாகாது.

யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்காக அயராது பாடுபட்டவர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் அரசியல் கைதிகளுக்கும் ஓடி ஓடி உழைத்தவர்.

மறைந்த ஆயர் அவர்கள் பல வழிகளில் ஒரு ஆளுமையாகவே விளங்கினார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தை நியாயமானது என்று வெளிப்படையாகவே தெரிவித்தார். வன்னி மண்ணுக்குச் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களைச் சந்தித்தார். அவர்களது கருத்துக்களை கேட்டறிந்தார். பின்னர் அவர் கேட்:டு வந்த கருத்துக்களை அரசுக்கும் பல வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பகிரங்கமாகவே அவர்கள் காதுகளில் கேட்கும் படியாகவே வெளிப்படுத்தினார்.

இவ்வாறான நாட்களில் எமது ஆண்டகையை திடீரெனப் பீடித்த நோயானது, பல கேள்விகளை அப்போது எழுப்பி நின்றது. ஆனால் அந்த கேள்விகளுக்கு பதில்கள் கிட்டாமலே கிடப்பில் போடப்பட்டது. திடகாத்திரமாக இருந்த ஒரு புனிதருக்கு திடீரென எழுந்து நடமாட முடியாமல் சக்கரங்கள் பூட்டப்பட்ட நாற்காலியில் அமர்ந்து நடமாட வேண்டிய அவலம் ஏற்பட்டதை பலர் சந்தேகத்தோடு பார்த்தார்கள். தங்களுக்குள் உரையாடினார்கள். ஆனால் அவை தொடர்பான தொடர்ச்சியான விடயங்கள் கலந்துரையாடப்பட வில்லை. அது ஒரு அரசாங்கம் சார்ந்த விடயமாக இருந்த படியால் அவருக்கு சிகிச்சை வழங்கிய வைத்தியர்கள் கூட மௌனமாக இருந்து விட்டார்கள்.

நாம் இந்த விடயத்தை ஆயரின் மறைவு நிகழ்ந்த நாளிலாவது குறிப்பிட வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டதற்கு காரணம் இதற்கு முன்னர் எமது தமிழ்ச் சமூகத்தில் அறிவு சார்ந்தவர்களாக விளங்கிய சிலரைப் பீடித்த இவ்வாறான நோய்களே ஆகும்.

எமது தமிழர் சமூகத்தில் கல்வியாளர் மத்தியில் இடது சாரிக் கொள்கைகளோடு தெளிவாக விவாதிக்கும் ஆற்றல் கொண்டவராக விளங்கியவர் பேராசிரியர் கைலாசபதியாவார். அவர் அமெரிக்காவில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக கற்றுவருகையில் அவரது சமூகவியல் கருத்துக்களை அமெரிக்காவில் உள்ள பேராசிரியர்கள் கூட ஏற்றுக் கொள்ளவில்லையாம். அமெரிக்காவின் கொள்கைகளைக் கூட பகிரங்கமாகவே விமர்சனம் செய்து வந்த கைலாசபதி அவர்கள்,

பறறி, அமெரிக்காவில் பல்கலைக்கழக வட்டாரத்தில் மட்டுமல்ல வெளியிடங்களிலும் அவர் பற்றிய பேச்சு இருந்ததாம். ஆனால் அவர் இலங்கை திரும்பி சில வருடங்களில் திடீரென பீடித்த நோய் காரணமாக மரணத்தை தழுவினார். அவர் மறைந்த வேளையில் அவருக்கு அமெரிக்காவில் "ஏதோ" ஒன்று நிகழ்ந்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் பேராசிரியர் அவர்களின் ஈழத்து சகாக்களினால் அவர்களின் வட்டாரத்தில் பேசப்பட்டு வந்தது.

இதைப்போன்றே, மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் திடீர் நோயினால் பீடிக்கப்பட்ட போது கூட, அவ்வாறான சந்தேகங்கள் தோன்றின. ஆனால் அவை மறைக்கப்பட்டுவிட்டன. இதில் அரசாங்கத்தின் சில சக்திகள் சம்பந்தப்பட்டிருந்தன என்பதே அன்றைய உரையாடல்களில் கலந்திருந்த விடயங்கள். ஆனால் அனைத்தும் மௌனமாகவே நகர்த்தப்பட்டு, சில வருடங்களின் பின்னர் ஆண்டகையின் அரிய ஒரு உயிரைப் பறித்துள்ளது. இது அதிர்ச்சி அல்ல. கொடுமையான ஒரு இழப்பு. நியாயத்தின் குரல் ஒன்று அறுக்கப்பட்ட பயங்கரம் இங்கு நிகழ்ந்துள்ளது என்பதே உ ண்மை. இது ஒரு இனப்படுகொலையே.

எனினும், தமிழ் மக்கள் அனைவரும் நிம்மதியாகவும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டுமென்பதில் உறுதியான பற்றோடு இருந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையை இந்த உலகம் உள்ளவரை எமது தமிழ் மக்கள் மறந்து விடமாட்டார்கள் என்றே நாம் நம்புகின்றோம்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மன்னார் மறைமாவட்டத்தில் பிரகாசித்த ஒளி விளக்கு அணைந்து விட்டது

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை



மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் இறுதி நல்லடக்கத்துக்கான சகல ஏற்பாடுகளும் மன்னார் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை (1) காலை 11 மணியளவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை நேற்று வியாழக்கிழமை (1) காலை இறைபாதம் அடைந்ததை ஆழ்ந்த அனுதாபத்துடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

மன்னார் மறைமாவட்டத்தில் சுடர் விட்டு பிரகாசித்த ஒளி விளக்கு இப்போது அணைந்து விட்டது. 2015 ஆம் ஆண்டு ஆயர் அவர்கள் நோய்வாய்ப் பட்டதினால் அதன் பின்னர் பல சிகிச்சைகள் பெற்று வந்தார்.

கடந்த இரண்டு மாதங்களாக அவர் நோய்வாய்ப்பட நிலையில்,அவரை யாழ்ப்பாணம் திருச்சிலுவை கண்ணியர் மட வைத்தியசாலையில் அனுமதித்திருந்தோம்.

அங்கே சிகிச்சை பெற்று வந்த ஆயர் நேற்று வியாழக்கிழமை காலை எம்மை விட்டு பிரிந்தார்.அவருடைய இறுதி நல்லடக்கத்துக்கான ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.மன்னார் மறைமாவட்டத்தில் ஆலோசனைக்குழு குருக்களுடன் கலந்தாலோசித்து ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

-ஆயர் அவர்களின் திருவுடல் யாழ் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைக்கப்படும். இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் மறை மாவட்டத்திற்கு பவனியாக எடுத்து வரப்படும்.

-பின்னர் மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் நாளை பெரிய வெள்ளி அன்று சிற்றாலயத்தில் மதியம் 2 மணியில் இருந்து அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மக்கள் வந்து இறுதி அஞ்சலியை செலுத்த முடியும்.ஞாயிற்றுக்கிழமை மால 3 மணியளவில் ஒரு பவனியாக அவரது பூதவுடல் ஆயர் இல்லத்தில் இருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் திங்கட்கிழமை மதியம் 2 மணி வரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மாலை 3 மணி அளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்கள். அதனைத் தொடர்ந்து பூதலுடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படும்.இறுதி சடங்கு கட்டுப்பாட்டுடன் இடம் பெற உள்ளமையினால் மக்கள் அதற்கு முன்னதாக உங்களின் இறுதி அஞ்சலியை மன்னார் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அல்லது பேராலயத்தில் செலுத்திக் கொள்ள முடியும்.

இறுதி இடக்க திருப்பலியில் அனைவரும் ஒன்று கூடக்கூடிய சந்தர்ப்பம் இல்லை. கொரோனா தொற்று நோய் காரணத்தினால் சுகாதார கட்டுப்பாடுகளுடன் திருப்பலி இடம் பெற உள்ளது.எனவே நேரத்துடன் வந்து ஆயருக்கு இறுதி அஞ்சலியை செலுத்திக் கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

ROOM FOR RENT

KENNEDY & EGLINTON McCowan & Sheppard

2 அறை கொண்ட தொடர் மாடிக் கட்டடத்தில் 1 water heater அறை வாடகைக்கு உண்டு.

Close to Kennedy Subway & Rt (McCowan RT). Includes: Internet, TV, TP, Radio.

1 Person - $1000 2 people - $1200 (Tamil people)

தொடர்புகளுக்கு: 416-752-4444 416-857-5252

LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RANJAN: (416) 464-2415

இந்தியன் விசா

- AIR TICKETS
- OCI - NEW APPLICATION/RENEWAL
- ENTRY VISA
- BUSINESS VISA 3 MONTHS/6 MONTHS/ 1 YEAR (Single / Double / Multy)

இலங்கை நாட்டுக்குள் உள் நுழைய, வெளிச்செல்ல தேவையான அரசாங்க ஆலோசனை வழங்கப்படும்.

YARA GLOBAL (PVT) LTD
No. 35, 1/4, Sagara Road, Colombo 4, Sri Lanka.
தொடர்பு: +94 7777 728707
E-mai: info@yaraglobal.lk

மணமகள் தேவை

கனடாவில் மகளுடன் நிரந்தரமாக வசிக்கும் பெற்றோர் இலங்கையில் வசிக்கும் கணனி தொழில் நுட்பவியாளராக பணிபுரியும்,
5'6" உயரமும், மெல்லிய சிவந்த ஆழகிய தோற்றமுடைய தமது 31 வயது இந்து வேளாளர் குல மகனுக்கு கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து நற்குணமுடைய மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்புகளிற்கு:
(437) 237-5105
Email: kirijah.ontario@gmail.com

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

# ஜேர்மனியிலிருந்து 31 ஈழத் தமிழர்கள் வலிந்து நாடு கடத்தப்பட்டனர்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)




அப்பட்டமான மனித உரிமை மீறல் மற்றும் “உயிருக்கான உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பு” ஆகியவற்றைப் புறந்தள்ளும் வகையில் ஜெர்மனியில் அகதித் தஞ்சம் கோரியிருந்த 31 பேர் புதன்கிழமை (30 மார்ச்) இரவு டூசல்டார்.்.ப் விமான நிலையத்திலிருந்து நாடு கடத்தப்பட்டனர்.

உள்ளூர் நேரம் இரவு 09:16 மணிக்கு ஸ்பானிஷ் விமான நிறுவமனா-ன-வேமோஸ் ஏர் பிளைட் PLM/ EB 308 விமானத்தில் இவர்கள் வலிந்து நாடு கடத்தப்பட்டனர். இதை ஜே டி எஸ் அமைப்பு தனது டிவிட்டரில் உறுதிப்படுத்தியுள்ளது. (JDSLanka) இந்த வி-மானம் புதன்கிழமை காலை 10.21 மணிக்கு கொழும்பை வந்தடைந்தது.

எனினும் கடைசி நிமிடத்தில் 4 பேர் விடுவிக்கப்பட்டு அவர்கள் ரயில் வண்டியில் தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

முன்னதாக அனைத்து நாட்டைச் சேர்ந்தவர்களும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் வலிந்த நாடு கடத்தலுக்கு எதிரா-கவும் குழுமி போராட்டங்களை முன்னெடுத்தனர். நாட் கடத்தப்படும் அவர்களின் உயிர்களுக்கு ஜெர்மன் அரசு ஆபத்தை ஏற்படுத்துகிறது என்று போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

“எந்த மனிதரும் சட்ட விரோதமானவர் அல்ல, நாடு கடத்தப்படுவதை ஒழித்துக் கட்டுங்கள், அகதித் தஞ்சம் கோருவது குற்றமில்லை” என்று டூசல்டர்.்.ப் விமான நிலையத்தில் குழுமியிருந்த பன்னாட்டு போராட்டக்கார ரகள் குரல் கொடுத்தனர்.

எனினும் .்.பிரான்க்பர்ட் மற்றும் ஸ்டுட்கர்ட் நகரில் தடுத்து வைக்கப்பட்ட இதர தமிழர்களின் நிலை என்னவென்று தெரியவில்லை. கடந்த சில நாட்களாக 100க்கும் மேற்பட்ட தமிழர்கள் ஜெர்மனியில் சுற்றி வளைக்கப்பட்டு நாடு கடத்தப்படுவதற்கு முதல் படியாகத் தடுப்பு நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்டனர்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற வேண்டும் எனும் தீர்மானத்திற்கு ஜெர்மனி ஆதரவு தெரிவித்த ஒரு சில நாட்களிலேயே வலிந்து தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை நாடு கடத்தும் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

ஜெர்மனியில் நிலைப்பாடு மேற்குலகின் “இரட்டை நிலைப்பாட்டை” காட்டுகிறது என்றும் மனித உரிமை அமைப்புகளும் செயல்பாட்டாளர்களும் எச்சரித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜெர்மனி சர்ச்சைக்குரிய வகையில் குடியேற்றம் தொடர்பான சட்டமொன்றை இயற்றியது. அந்தச் சட்டம் ஜெர்மனியின் அகதி தஞ்சக் கொள்கை மற்றும் குடியேற்ற விதிமுறைகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. மேலும் அகதித் தஞ்சம் கோரப்பட்டு அது நிராகரிக்கப்பட்டோரை நாடு கடத்தவும் அந்தச் சட்டம் வழி செய்கிறது.

அதேவேளை ஜெர்மனியின் அரசியல் சாசனம் பிரிவு ஒன்றின் கீழிலுள்ள “அடிப்படை உரிமைகள்” கீழ்க்கண்டவற்றை தெளிவாக வரையறுக்கிறது.



1. மனித வாழ்வும் கண்ணியம் மீற முடியாததாகும். அதை மதித்து பாதுகாக்க வேண்டியது அரசி-ன் அனைத்து அதி-கார மட்டத்தின் கடமையாகும்.

2. எனவே ஜெர்மன் மக்கள் மீற முடியாததும் மாற்ற முடியாததுமான மனித உரிமைகள் அனைத்து சமூகம், உலகில் சமாதானம் மற்றும் நீதியின் அடிப்படையாகும்.

அகதித் தஞ்சம் கோரி அது நிராகரிக்கப்பட்டவர்களை வலிந்து நாடு கடத்த வேண்டாம் என்று இலங்கை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் கட்சிகளும், சிவில் சமூகங்களும் ஜெர்மனிக்கு உருக்கமான கோரிக்கையை விடுத்திருந்தனர்.



# இலங்கையின் போர்க் குற்றவாளிகள் மீதான பயணத்தடையையும் இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணையையும் வலியுறுத்தும் கனடிய பிரதான எதிர்க்கட்சி





கனடாவின் பிரதான எதிர்கட்சியான கன்சவேட்டிவ் கட்யானது இலங்கையில் பாரிய மனித உரிமைக்குற்றங்களுக்கு காரணமானவர்கள் மீதான பயணத்தடையை விதிக்குமாறு கனடிய லிபரல் அரசைக் கோரியுள்ளது. கனடாவில் நடைமுறையில் உள்ள மக்கன்சி சட்டவிதிகளின் பிரகாரம் அதனை உடன்செய்யுமாறு அது வலியுறுத்துகிறது. இச்சட்டவிதிகள் சம்மந்தப்பட்டவர்கள் மீதான மேலும் பல நடவடிக்கைகளுக்கும் வலிகோலும் என்பதுவும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

கன்சவேட்டிவ் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான நிழல் அமைச்சர் மைக்கல் சொங்கும் சர்வதேச அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளுக்கான நிழல் அமைச்சர் கார்னட் ஜீனியசும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அவ்வறிக்கையில் தாம் இனப்படுகொலை குறித்த சுயாதீன சர்வதேச விசாரணையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதை நினைவுகூர்ந்துள்ள அவர்கள் ரூடோ தலைமையிலான லிபரல் அரசு அது குறித்து அமைதி காப்பது குறித்து தமது விசனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

2019 இல் இறுதியாக நடைபெற்ற கனடிய பொதுத்தேர்தலுக்கு முன்னர் கனடியப் பாராளுமன்றத்தில் ஜக்கிய நாடுகள் சபை இலங்கையில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் தமிழர் இனப்படுகொலை குறித்து சுயாதீன சர்வதேச விசாரணையை நடாத்த வேண்டும் என ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற தீர்மானத்தை சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சி அது குறித்து மேலதிக நடவடிக்கைகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சமீபத்தில் ஜெனீவாவில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கடந்த காலங்களை விட முன்னேற்றகரமாக அமைந்தாலும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் மீதான சுயாதீன சர்வதேச விசாரணையையோ அல்லது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல விடயங்களையோ அது உள்ளடக்கவில்லை எனவும் கரிசனை வெளியிட்டுளளது கனடிய எதிர்கட்சி.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் பொறுப்புக்கூறல் விடயத்தில் எவ்வித முன்னெடுப்புக்களை செய்வதற்கான முறைமைகளையோ விருப்பையோ கொண்டிக்கவில்லை என்ற ஆணையாளரின் கூற்றை சுட்டிக்காட்டியுள்ள கனடிய எதிர்க்கட்சி இந்நிலையில் அவர் கோரிக்கைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகளை கனடிய அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுளளது.

STATEMENT

**Conservatives urge Trudeau Liberals to support an investigation into human rights abuses in Sri Lanka**

March 29, 2021
FOR IMMEDIATE RELEASE

**Ottawa, ON** – Today, the Hon. Michael Chong, Conservative Shadow Minister for Foreign Affairs, and Garnett Genuis, Conservative Shadow Minister for International Development and Human Rights, issued the following statement about the human rights situation in Sri Lanka:

"Conservatives continue to be gravely concerned about the human rights situation in Sri Lanka, including the erosion and political obstruction of judicial independence and key institutions responsible for human rights violations, increased marginalization of the Tamil and Muslim communities, and restrictions on the public commemoration of those killed in the war, including the destruction of a memorial.

"Shortly before the last general election, the Foreign Affairs Committee and the House of Commons unanimously passed motions calling on the 'United Nations to establish an international, independent investigation into allegations of genocide against Tamils committed in Sri Lanka, including the last phase of the armed conflict in 2009.'

"Although a step forward, the resolution adopted at the UN Human Rights Council last week does not meet that call to action. Additionally, many of High Commissioner Michelle Bachelet's recommendations were not included in the UNHCR resolution. She noted that 'given the demonstrated inability and unwillingness of Government [of Sri Lanka] to advance accountability at the national level, it is time for international action to ensure justice for international crimes.' In support of High Commissioner Bachelet's recommendation, Conservatives call on the Trudeau government to impose Magnitsky sanctions on those responsible for gross human rights violations.

"Conservatives are also concerned by the ban imposed by the Sri Lankan government on peaceful Tamil-Canadian organizations for their work in advancing human rights in Sri Lanka. We call on the Trudeau government to acknowledge this ban is not an appropriate response to legitimate criticism.

"Canada's Conservatives continue to ask for an independent international investigation into allegations of genocide. To date, there is no indication the Trudeau government has advocated for that investigation."

-30-

**For more information:**

Office of the Hon. Michael Chong, M.P.
Michael.Chong@parl.gc.ca
613-992-4179

Office of Garnett Genuis, M.P.
Garnett.Genuis@parl.gc.ca
613-298-8653

சிறீலங்கா அரசு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மற்றும் தமிழர்கள் மீது சமீபத்தில் விதித்துள்ள தடைகள் குறித்து தமது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ள அறிக்கை மனித உரிமையை முன்னேற்ற தொழிற்படும் கனடிய தமிழர் அமைப்புக்களின் நியாயபூர்வமான விமர்சனங்களை தடைகள் மூலம் எதிர்கொள்வது முறையல்ல எனவும் கடிந்துள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் பல நிலைமைகளை தனது அறிக்கையில் குறிப்பிட்டு அவை குறித்து தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ள கனடிய எதிர்கட்சி அதில் சமீபத்தில் இடித்தொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத்தூபி விடயத்தையும் நினைவு கூர்ந்து போரில் கொல்லப்பட்டவர்களுக்கான பொதுமக்கள் நினைவு ஒன்றுகூடல்கள் தடுக்கப்படுவது குறித்த கரிசனையையும் வெளியிட்டுள்ளது.

ஐ.நா தீர்மானத்தை கடந்து கனடா உட்பட சர்வதேச சமூகம் தமது அடுத்த கட்ட நடிவடிக்கைகளை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம் என்பதை வலியுறுத்தும் வகையிலான முதல்க் குரலாக கனடிய எதிர்கட்சியான கன்சவேட்டிவ் கட்சியின் அறிக்கையை கொள்ளலாம் என்கின்றனர் ஈழத்தமிழர் நலனில் அக்கறை கொண்டவர்கள்.

## "Friends, we're facing a very serious situation" - Ontario Premier Doug Ford

# மீண்டும் நான்கு வாரங்களுக்கு முடங்குகின்றது ஒன்றாரியோ மாகாணம் நண்பர்களே! நாம் மிகவும் மோசமானதும் ஆபத்தானதுமான கட்டத்தில் உள்ளோம் என்கிறார் மாகாண முதல்வர் டக் போர்ட்



"நண்பர்களே! எமது மாகாணம் மிகுந்த மோசமானதும், ஆபத்தானதுமான கட்டத்தில் உள்ளோம். எனவே அனைவரது நலன் கருது ஒன்றாரியோ மாகாணத்தின் அனைத்தும் எதிர்வரும் நான்கு வாரங்களுக்கு முடக்கப்படும் நிலையை நாம் அமுல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது".

இவ்வாறு ஒன்றாரியோ மாகாண பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்"கில் நேற்று பிற்பகல் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், மேற்படி முடக்கம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் மேலும் தெரிவிக்கையில் "தற்போதைய சூழ்நிலையில் ஒரு புதிய எதிரியாக நோய்க்கிருமி எம்மைச் சூழ்ந்துள்ளது. அது மிகவும் ஆபத்தானது. இதற்கு முன்னர் கடந்த வரும் எம்மை தாக்கிய நோய்க்கிருமியிலும் பார்க்க மிகவும் கொடிதான கிருமி இதுவாகும். இந்த நோய்க்கிருமியால் பாதிக்கப்பட்ட சுமார் 2000 பேர் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

நீங்கள் ஒன்றை உணரவேண்டும். இந்த நோய்க்கிருமியின் தாக்கத்திலிருந்து நீங்கள் வெல்ல முடியாது" என்று கூறிய முதல்வர் டக் போர்ட் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்" உங்கள் குழந்தைகளில் ஒருவர் அல்லது வேறு யாருடைய குழந்தைகளாவது ஒரு ஆபத்தான நோயுள்ள சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதை ஒரு தடைவ கற்பனை செய்து பாருங்கள், ஒரு இளமையான மற்றும் ஆரோக்கியமான நபர் கூட இந்த நோயின் தாக்கத்திலிருந்து வெல்லமுடியாதவர்கள் என்று உணர்ந்ததால் தான். நீங்கள் கவனமாக இருப்பீர்கள்.

எனவே அடுத்த நான்கு வாரங்களுக்கு, COVID-19 பரவலைத் தடுப்பதற்கான ஒன்றாறியோ அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக வர்த்தக நிலையங்களும் சேவை வழங்கும் நிலையங்களும் கட்டுப்பாடுகள் நிறைந்த இடங்களாக அறிவிக்கப்படுகின்றன, ஆனால் இது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நடந்ததைப் உங்கள் வீட்டிலேயே தங்குவதற்கான உத்தரவு அல்ல" என்றார் முதல்வர்.

அடுத்து ஒன்றாரியோ மாகாணத்தின் துணை பிரதமரும் சுகாதார அமைச்சருமான கிறிஸ்டின் எலியட் இந்த முடக்கம் தொடர்பாக தனது கருத்துக்களைக் கூறினார்.

"நாங்கள் வீட்டிலேயே தங்குவதற்கான கட்டாயத்தை உருவாக்கப் போவதில்லை, ஏனென்றால் இது குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் இருவருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே நாம் பார்க்கின்றோம், குறிப்பாக வெப்பமான வானிலை வருவதால், மக்களால் இதற்கு கட்டுபட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் எல்லோரும் தொடர்ந்து பொது சுகாதார பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுகிறார்கள் என்று கருதி, வெளியில் சென்று வெளியில் மகிழுங்கள்".

உட்புற அல்லது வெளிப்புற விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உடற்பயிற்சிகளும் செயல்பாடுகளை நிறுத்த வேண்டும், இதில் உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் குறைபாடுகள் உள்ள ஒருவருக்கு உடல் சிகிச்சை அணுகல் உள்ளிட்ட விதிவிலக்குகள் உள்ளன.

"நாங்கள் இன்று எங்கே இருக்கிறோம், 2021 ஜூன் மாதத்திற்குள் நாங்கள் எதிர்பார்க்கும் மில்லியன் கணக்கான தடுப்பூசிகளுடன் நாங்கள் எங்கிருப்போம் என்பதற்கான இடைவெளியை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் "நாங்கள் இப்போது மிகவும் ஆபத்தான மற்றும் வேகமாக நகரும் வைரஸுக்கு எதிராக ஒரு தீவிரமான பந்தயத்தில் இருக்கிறோம். இதற்கான செலவுகள் இன்னும் மிக அதிகமாக உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார்.

# கனடா வரும் தடுப்பூசிகளின் மேலுறையில் கூடுதல் தகவல்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)




உலகளவில் இராஜதந்திர உறவுகள் பல மட்டங்களில் பல வகைகளில் கையாளப்படுவது வழக்கம். அது விளையாட்டின் மூலம், கலை கலாச்சாரக் குழுக்களின் பயணங்கள் மூலம், மக்களின் நேரடித் தொடர்புகள் மூலம் என்று அரசியல் நிலவரங்களுக்கு ஏற்ப முன்னெடுக்கப்படும். இது ஆங்கிலத்தில் "பின் வாசல் இராஜதந்திரம்" என்றழைக்கப்படுகிறது.

அப்படி இந்தியா முன்னெடுத்துள்ள ஒரு பன்னாட்டு இராஜதந்திரம் "தடுப்பூசி இராஜதந்திரம்" -Vaccine diplomacy-. உலகளவில் பெரும் பாதிப்பொன்று ஏற்படும் போது அனைவருக்கும் உதவுவது ஜனநாயகக் கடமை என்று இதன் மூலம் இந்தியா ஒரு செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. இதில் இந்தியாவின் சுயநலன் இருந்தாலும் பொதுநலன் இருப்பதையும் மறுக்க முடியாது.

அவ்வகையில் கனடாவுக்கும் இந்தியா தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்து இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முயற்சியில் இறங்கியது. முதல் தொகுதியான ஐந்து லட்சம் டோஸ் கனடாவைச் சென்றடைந்ததும், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியப் பிரதமரை தொலைபேசியில் அழைத்து நன்றி கூறினார்.

இவ்வையகத்தை ஆட்டிப் படைக்கும் கொரோனா பெருந்தொற்று எப்போது முடிவுக்கு வரும் என்பது குறித்து அறிவியல் அறிஞர்களால் உறுதியாகக் கூற முடியாமல் திணறுகிறார்கள்.

இப்போதைக்கு சமூக இடைவெளியைப் பேணுதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிந்து செல்வதோடு தடுப்பூசி போட்டுக் கொள்வது மட்டுமே அந்த கொடிய ஆபத்திலிருந்து தற்காத்து கொள்ள ஒரே வழியாகவுள்ளது.



தடுப்பூசி விஷயத்தில் உலகளவில் இந்தியாவே முன்னணி தயாரிப்பு மையமாகவுள்ளது. அமெரிக்காவிலுள்ள ஃபைசர் மற்றும் பிரிட்டனிலுள்ள ஆஸ்ட்ரா ஜெனிகா ஆகிய இரு முன்னணி மருந்து தயாரிக்கும் பெரு நிறுவனங்கள் பல மாதங்கள் ஆய்வு நடத்தி தடுப்பூசிகளைத் தயாரித்து உலகம் முழுவதும் பயன்பாட்டுக்கு அளித்துள்ளது.

அவ்வகையில் கனடாவுக்கும் வந்திறங்கியுள்ள தடுப்பூசிகளின் மேலுறையிலுள்ள தகவல்களை மேம்படுத்தியுள்ளதாக நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம் இணைந்து உருவாக்கி, சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவனத்தால் தயாரித்து கனடாவுக்கு வந்துள்ள "கோவிஷீல்ட் தடுப்பூசியின் மேலுறையில் "மிகவும் அபூர்வமாக குறைந்த அளவிலான இரத்த தட்டுக்கள் (blood platelets) தொடர்புடைய இரத்த உறைவு ஏற்படக் கூடும்" எனும் எச்சரிக்கை வாசகத்தையும் தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு கூறி அதை மேலுறையில் மேம்படுத்தியுள்ளதாக கனேடிய சுகாதாரத்துறை கூறியுள்ளது.

ஐரோப்பாவின் சில நாடுகளில் இந்த தடுப்பூசி செலுத்தப்பட்ட சிலருக்கு இரத்தக் கட்டு ஏற்பட்டதையடுத்து கவலைகள் எழுந்தன. உடனடியாக டென்மார்க், நார்வே மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் இந்தத் தடுப்பூசியின் இறக்குமதியை நிறுத்தி வைத்தன. பின்னர் தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தமது தடுப்பூசிக்கும் இந்த இரத்தக் கட்டுகளுக்கும் தொடர்பில்லை என்று விளக்கமளித்து ஆய்வுச் சான்றுகளையும் முன்வைத்ததை அடுத்து இந்தப் பதற்றம் தணிந்தது.

இதையடுத்தே கனேடிய அரசு கூடுதல் எச்சரிக்கையாக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தமது குடிமக்களுக்கு தடுப்பூசியை அளிக்கும்போது, ஒரு அரசு எந்தளவுக்கு கூடுதலான கவனம் எடுத்துக் கொள்கிறது என்பதற்கு கனேடிய அரசு ஒரு உதாரணமாக உள்ளது.

அதேவேளை கனடா சுகாதாரத்துறையான "ஹெல்த் கனடா" தொடர்ந்து இந்த தடுப்பூசியை ஆதரிக்கிறது. இதுவரை இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்ட யாருக்கும் ரத்தக்கட்டு ஏற்படவில்லை என்பதையும் கனேடிய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. எதிர்வரும் மே மாதம் மேலும் 1.5 மில்லியன் டோஸ் அளவுக்கு இந்த தடுப்பூசியை கனடா இறக்குமதி செய்யவுள்ளது.

நாட்டிலுள்ளவர்கள் அனைவருக்கும் மிக விரைவாக தடுப்பூசியை வழங்குவது தமது அரசின் முன்னுரிமை என்று பிரதமர் டிரூடோ அறிவித்துள்ளார்.

இரத்தத்திலிருக்கும் கூறுகளான இரத்த தட்டுக்கள் காயங்கள் ஏற்படும் போது உடலிருந்து வெளியேறும் இரத்தத்தின் அளவைக் குறைக்கப் பெரிதும் உதவுகிறது.

தடுப்பூசியின் மேலுறையில் இந்த கூடுதல் எச்சரிக்கை வாசகத்தைச் சேர்ப்பதன் மூலம், தடுப்பூசி செலுத்தி கொள்ளும் யாருக்கேனும் மூச்சுத் திணறல், நெஞ்சு வலி,காலில் வீக்கம் அல்லது தொடர்ச்சியாக வயிற்றில் வலியிருந்தால் அவர்கள் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் என்று மக்களை எச்சரிக்கவே அந்த கூடுதல் வாசகம் சேர்க்கப்பட்டுள்ளது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# போர்குற்றவாளிகளிடம் ஒப்படைக்கப்பெற்ற தமிழ்அகதிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நாடுகடந்த அரசாங்கம் கோரிக்கை

ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட தமிழ்அகதிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஆணையாளரிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

நாடுகடத்தப்பட்ட தமிழ்அகதிகள் இலங்கை கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து, இலங்கையின் கொரூரமான இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை அடுத்தே இந்தக் கோரிக்கையினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்துள்ளது.

ஐ.நாவின் அகதிகளுக்கான உயராணையாருக்கு பிரதமர் வி.உருத்திரகுமாரன் அனுப்பிய கடித்தில், இலங்கை இராணுவம் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை செய்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

உலகில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என ஐ.நாவின் அறிக்கையொன்றில் உள்ளது.

இலங்கை தொடர்பான ஐ.நா. உள்நாட்டு மறுஆய்வு அறிக்கையின்படி, 2009 ஆண்டின் இறுதிப்பபோரின் போரின் இறுதி ஆறு மாதங்களில் எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் உள்ளனர். இலங்கை இராணுவத்தினரால் நூற்றுக்கணக்கான தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலுக்கட்டாயமாக நாடுகடத்தப்பட்ட தமிழ்அகதிகளின் பாதுகாப்பு குறித்து கவலை கொள்வதாக தெரிவித்துள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன் இலங்கை இராணுவ மற்றும் உளவுத்துறையிடமிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்அகதிகளை, சந்திக்கவும், அவர்களை விடுவிக்கவும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கையில் உள்ள ஐ.நா அதிகாரிக்களை வேண்டுமாறு ஐ.நாவின் அகதிகளுக்கான உயராணையாளரிடம் கோரியுள்ளார்.

முன்னராக தமிழ்அகதிகளை நாடுகடத்த வேண்டாமென ஜேர்மன் வெளிவி-கார அமைச்சருக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தமை இங்கு குறிப்பிடதக்கது.

# மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை காலமானார்



மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டனை தனது 80ஆவது வயதில் வியாழக்கிழமை (1) அதிகாலை சுகயீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

குறித்த தகவலை மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உறுதி படுத்தியுள்ளார்.

நீண்ட காலம் உடல் சுகவீனம் காரணமாக ஓய்வு நிலையில் இருந்த மறைமாவட்ட ஆயர் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கண்ணியர் மரு-தமடு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆயரின் இறுதிக்கிரிகைகள் தொடர்பான விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என குரு முதல்வர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (01-04-2021)**



# இந்திய மீனவர்கள் விடுதலை போல் இந்திய சிறைகளில் உள்ள இலங்கை தமிழ் மீனவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும்




## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை அரசினால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டது போல் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மீனவர்களையும் உடன் விடுதலை செய்ய இலங்கை,இந்திய அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை (29) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 54 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு அவர்கள் இரண்டு தினங்களில் படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்களின் விடுதலைக்காக இந்திய தூதரகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த மீனவர்களுக்கு விடுதலையை பெற்றுக் கொடுத்தமை பாராட்டத்தக்கது. ஆனால் இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி குற்றச்சாட்டில் பிடி பட்டு இந்திய சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பெரும்பான்மை இன மீனவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்காக இலங்கை அரசாங்கமும், இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களை விடுதலை செய்கின்றனர். ஆனால் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களையும், அவர்களின் மீன் பிடி உடமைகளையும் இன்று வரை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் எல்லை தாண்டி பிடி-படும் பட்சத்தில் அவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை அரசாங்கம் தமிழர்களின் விடையம் என்ற வகையில் அசமந்த போக்கை கடைப்பிடிக்க கூடாது. அவர்களும் மீனவ சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடுதலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாட அனுமதிக்கக் கூடாது. எனவே தமிழராக உள்ள மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடையத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் இலங்கை அரசாங்கமும் தமிழ் மீனவர்களை விடுதலை செய்வதற்கான ஒரு முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

-எங்கு பார்த்தாலும் இன ரீதியான ஒடுக்கு முறையை இலங்கை அரசாங்கம் செய்து வருகின்றது. குறிப்பாக எல்லை தாண்டி போகின்ற எமது மீனவர்கள் இன்றைக்கும் சிறைகளில் வாடிக்கொண்டு இருக்கின்றார்கள்.அவர்கள் வேண்டும் என்று எல்லை தாண்டிச் செல்வதில்லை.

எனவே அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை யாரும் செய்யவில்லை. நாங்களும், அமைப்புக்களும் மீனவர்களை விடுதலை செய்ய குரல் கொடுக்கின்றோம். ஆனால் அரசாங்கம் இவ்விடையத்தில் அக்கறை செலுத்தவில்லை.எனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மீனவர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்து நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் முகாம் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது தமிழ் மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசாங்கம் மற்றும் மீன் பிடித்துறை அமைச்சர் ஆகியோர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய பிரதமர் சஜித் பிரேமதாஸ அவர்களினால் கடந்த அரசில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தினால் பல்வேறு குடும்பங்கள் பலன் அடைந்தார்கள். ஆனால் வீட்டுத்திட்டத்தை பெற்ற பல குடும்பங்கள் இன்று கடன் காரராக உள்ளனர்.

சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடுகளுக்கு சுமார் 1 இலட்சம் ரூபாய் முதல் 2 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. புதிய வீடுதகளை அமைப்பதற்காக தமது பழைய வீடுகளை அகற்றி வீடுகளை கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

-தமது உடமைகளை அடகு வைத்தும், வங்கிகளில் கடனை பெற்றும் அதி கூடிய வட்டிக்கு பணத்தை பெற்றும் வீடுகளை கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

-மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டே குறித்த வீட்டுத்திட்டம் அரசினால் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது குறித்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் இடர்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

-தற்போதைய அரசு கூட பாதீக்கப்பட்ட மக்களின் வீட்டுத்திட்ட பிரச்சினையை நிவர்த்தி செய்ய அக்கரை காட்டவில்லை.

தற்போதைய எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த அரசாங்கத்தில் வழங்கியதன் காரனத்தினாலேயே தற்போதைய அரசாங்கம் அக்கரை காட்டவில்லை என தெரிகின்றது.

தற்போது எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பில் வாய் திறக்க கஸ்டப்படுகின்றார். பல்வேறு விடையங்களை அவர் பாராளுமன்றத்தில் கதைத்தாலும் கூட வீட்டுத்திட்ட பிரச்சினையில் அவர் வாய் மூடி மௌனம் காக்கின்றார். இவ்விடையத்திற்கு அவரும் குரல் கொடுக்க வேண்டும்.

-மன்னார் மாவட்டத்தில் வீட்டுத்திட்டத்தை பெற்று கொடுப்பணவுகள் கிடைக்காத மக்களை ஒன்றிணைத்து மன்னாரில் முதல் கட்டமாக நாளை செவ்வாய்க்கிழமை(30) காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம்.

அரசாங்கம் பாதீக்கப்பட்ட மக்களுக்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பணவுகளை உடனடியாக வழங்க கோரி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

-வீட்டுத்திட்டத்தை பெற்று நிதி உரிய முறையில் கிடைக்காதவர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு வழங்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து வவுனியாவிலும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (29-03-2021)**

# தொழில்துறை வளர்ச்சி சமநிலை இல்லாததால் பின்தங்கும் தென்மாவட்டங்கள்; வேலைவாய்ப்பு உருவாக்காததால் இடம்பெயரும் இளைஞர்கள்


## மதுரை வரும் பிரதமர் கவனிப்பாரா?

கடந்த கால் நூற்றாண்டாக தென் மாவட்டங்கள் தொழில்துறையில் பெரிய வளர்ச்சிப் பெறாததால் படித்த, படிக்காத இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காக கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட இரண்டாம் நிலை நகரங்களுக்கு இடம்பெயரும் அவலம் ஏற்பட்டுள்ளது.மதுரையை மையமாகக் கொண்ட தென் மாவட்டங்கள், சிறு, சிறு நகரங்களையும், கிராமங்களையும் அதிகம் கொண்டது.

விவசாயமும், அதனைச் சார்ந்த துணைத்தொழில்களும் மட்டுமே முக்கியத் தொழிலாக உள்ளன. சென்னை, சேலம், ஓசூர், கோவை, திருச்சி, திருப்பூர் போன்ற தொழில் நகரங்களை போல் தென் மாவட்டங்களில் தொழில் நகரங்கள் இல்லை.சிறிய அளவிலான சிறு, குறு தொழில் நிறுவனங்கள், கால்நடை வளர்ப்பு, விருதுநகர் பட்டாசு ஆலைகள், ஹோட்டல்கள், ஜவுளி நிறுவனங்கள் மற்றும் விவசாயம் உள்ளிட்டவைதான் மக்களுக்கான வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில்களாக உள்ளன.மதுரையில் மட்டும் சில ஐ.டி நிறுவனங்கள் உள்ளன. அதிலும் அதிக ஊதியத்தில் வேலைபார்க்கக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் பணிபுரியக் கூடியளவிற்கு பெரிய வேலைவாய்ப்புகள் இல்லை.

அதனால், கல்லூரி படிக்கும் புதியவர்களுக்கான பயிற்சிக் களமாக இந்த ஐடி நிறுவனங்கள் செயல்படுகின்றன. கடந்த சில ஆண்டாக மழை பெய்து ஓரளவு விவசாயம் நடந்தாலும், போதிய விலை கிடைக்காததால் இந்த தொழிலும் லாபகரமாக இல்லை. அதனால், விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் புதிய தொழில் முதலீடுகளும், தொழிற்சாலைகளும் ஏற்கெனவே தொழில்துறையில் வளர்ச்சிப்பெற்ற சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும், கோவைக்குமே செல்கின்றன.மதுரைக்கு முக்கியத்துவம் கொடுத்து தொழில் முதலீடுகள், தொழில்பேட்டைகள் எதுவும் அமைக்கப்படவில்லை. வேலைவாய்ப்பு இல்ல ாததால் படித்த, படிக்காத தென் மாவட்ட இளைஞர்கள், வேலை தேடி சென்னை, பெங்களூரு, கோவை, திருப்பூர் நகரங்களுக்கும் இடம்பெயரும் அவலம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு தொழில் வளர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன் கூறுகையில், ''தொழில்



வளர்ச்சி தமிழகம் முழுவதும் சமநிலையாக இல்லை. மேற்கு, வடக்கு, மத்திய மாவட்டங்களை ஒப்பிடும்போது தென் மாவட்டங்களில் பெரிய தொழிற்சாலைகள் இல்லை.ஒரு பெரிய தொழிற்சாலை அமையும்பட்சத்தில், அதற்கு தேவையான உபகரணங்கள் தயாரித்து கொடுக்க 200க்கும் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் உருவாகும்.அதுவும், ஓசூர், கோவை, சென்னை போன்று மிகப்பெரிய தொழிற்பேட்டைகள் மதுரையில் அமைந்தால் மதுரை மட்டுமில்லாது தென் மாவட்டமே தொழில்துறையில் ஏற்றம்பெறும்.இப்படிதான் சென்னை, ஓசூர், கோவை, நகரங்கள் வளர்ச்சிப்பெற்றன.

உயர் நீதிமன்றம், எய்ம்ஸ் போன்ற மிகப்பெரிய கட்டமைப்பு திட்டங்கள் வரும்போதுதான் அதனை சார்ந்து மற்ற தொழில்கள், மக்கள் வாழ்வாதாரம் மேம்படும்.மதுரை விமானநிலையம் விரிவாக்கப்பணிக்கு 2009ம் ஆண்டு முதல் தற்போது வரை நிலத்தை கையகப்படுத்தும் பணி கிடப்பில் போடப்பட்டுள்ளது, '' என்றார்.மதுரை 4 ஆயிரம் ஆண்டிற்கு மேற்பட்ட வரலாறு கொண்ட பாரம்பரிய நகரமாக இருந்தும் இன்னமும் சுற்றுலாவை மட்டுமே நம்பியிருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.கரோனா மட்டுமில்லாது மீனாட்சியம்மன் கோயிலிலும் தற்போது செல்போன் கட்டுப்பாடு, பாதுகாப்பு கெடுபிடியால் முன்போல் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள், வெளிமாநில சுற்றுலாப்பயணிகள் வருவதில்லை.

அதனால், சுற்றுலாப்பயணிகளை நம்பி செயல்படக்கூடிய சதாரண ஆட்டோ, டாக்ஸி தொழிலாளர்கள் முதல் சுற்றுலா சேவை நிறுனங்கள், நட்சத்திர ஹோட்டல்கள், ரிசார்ட்கள், தங்கும் விடுதிகள் வரை பாதிக்கப்பட்டுள்ளன. விமானநிலையத்தை மேம்படுத்தவும், தென் மாவட்ட தொழில்துறையை மேம்படுத்தவும் யாரும் அக்கறை காட்டுவதாக தெரியவில்லை, '' என்றார்.மதுரை, ராமேசுவரம், கொடைக்கானல், கன்னியாகுமரியை இணைக்கும் விமான சுற்றுலா திட்டம் அறிவித்து 6 ஆண்டிற்கு மேலாகியும் இன்னும் ஆய்வுநிலையிலே உள்ளது.மதுரை விமானம் நிலையம் இன்னும் சுங்கவரி விமான நிலையமாகவே உள்ளன. துபாய், இலங்கை மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட மிகச் சிறிய நமாடுகளுக்கு மட்டுமே இங்கிருந்து விமானங்கள் இயக்கப்படுகிறன்றன.

24 மணி நேரமும் இந்த விமானநிலையம் இயங்காததால் பிற நாட்டு விமானச் சேவை தடைப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகள், இந்த விமானநிலையத்தை பன்னாட்டு விமானநிலையமாக மாற்ற நடவடிக்கை எடுத்தால் தென் மாவட்ட பயணிகள் மற்ற நகரங்களுக்கு செல்லாமல் எளிதாக வெளிநாடுகளுக்கு சென்று வருவதோடு தொழில்துறை, விவசாயத்துறை வளர்ச்சிப்பெற வாய்ப்புள்ளது. இதற்கு உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் எந்த முயற்சியும் செய்யவில்லை.கிடப்பில் கிடக்கும் தலையாய திட்டங்கள்மத்திய அரசு துணையுடன் நிறைவேற்ற வேண்டிய 'எய்ம்ஸ்', மெட்ரோ ரயில் திட்டம், சிப்காட் தொழிற்பேட்டைகள், மதுரைஇன்டஸ்ட்ரியல் காரிடர் திட்டம், மதுரைபோடிரயில்திட்டம், திண்டுக்கல்சபரிமலை ரயில் திட்டம், பழனி கொடைக்கானல் ரோப்கார் திட்டம் போன்றவை இன்னும் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

அதுபோல், தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கும், நாட்டின் பிற நகரங்களுக்கும் மக்கள் பஸ்களில் செல்வதற்கு போதிய இருக்கைகள் இல்லாமல் சிரமப்படுகின்றனர்.அதனால், தீபாவளி, பொங்கல் உள்ளிட்ட முக்கிய பண்டிகை நாட்களில் வெளியூர்களில் இருந்து சொந்த ஊர்களுக்கு திரும்ப முடியாமல் கஷ்டப்படுகின்றனர். அதனால், தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு கூடுதல் ரயில் வசதிகள் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இதுபோன்ற தென் மாவட்ட வளர்ச்சிக்கான தலையாய திட்டங்களை செயல்படுத்துவதற்கு கடந்த கால்நூற்றாண்டாக எந்த அரசுகளும் நடவடிக்கை எடுக்கவில்லை. இன்று மதுரை தேர்தல் பிரச்சாரத்திற்கு வரும் பிரதமர் மோடி, இந்த திட்டங்களின் நிலை, அதனை செயல்படுத்துவதை பற்றி உறுதியளித்தால் தென் மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

# ரஜினிக்கு பால்கே விருது: ஈபிஎஸ் ஓபிஎஸ் வாழ்த்து



ரஜினிக்கு பால்கே விருது அறிவிக்கப்பட்டு இருப்பதைத் தொடர்ந்து, தொலைபேசி வாயிலாக தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.இந்தியத் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் ரஜினிகாந்த். இவருக்கு 70 வயது ஆகிறது. இவரின் கலைச்சேவையை கவுரவிக்கும் வகையில் பத்ம பூஷண், பத்ம விபூஷண் உள்ளிட்ட விருதுகளை வழங்கி மத்திய அரசு கவுரவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ரஜினிக்கு தாதா சாகேப் பால்கே விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டு இருப்பதாக மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தனது ட்விட்டர் பதிவில் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தமிழ்த் திரையுலகினரைப் பெரும் உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.பிரதமர் மோடி, கமல்ஹாசன் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் ரஜினிக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டு இருப்பதை, ரஜினி ரசிகர்கள் சமூக வலைதளத்தில் கொண்டாடி வருகிறார்கள். ரஜினிக்குத் தொலைபேசி வாயிலாக தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி. இது தொடர்பாக தனது ட்விட்டர் பதிவில் முதல்வர் பழனிசாமி கூறியிருப்பதாவது:"தாதா சாகேப் பால்கே விருது பெற்றுள்ள நடிகர் ரஜினிகாந்துக்கு நான் தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தேன். திரைத்துறையில் தங்களது கடின உழைப்பிற்குக் கிடைத்த அங்கீகாரம் இந்த தாதா சாகேப் பால்கே விருது. தாங்கள் இன்னும் பல விருதுகள் பெற்று நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்"இவ்வாறு முதல்வர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# வாக்காளர்களுக்கு கூகுள் பே, போன் பே, பேடிஎம் மூலம் பணப் பட்டுவாடா: தேர்தல் ஆணையத்தில் திமுக புகார்

வாக்காளர்களுக்கு கூகுள் பே, போன் பே, பேடிஎம் மூலம் பணப் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாக்காளர்களிடம் இருந்து வாக்காளர் அட்டை மற்றும் செல்பேசி எண் தகவல்களைப் பெறும் அதிமுகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழகத் தலைமைத் தேர்தல் அலுவலரிடம் திமுக புகார் அளித்துள்ளது.இதுகுறித்து திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையருக்கும், தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடமும் அளித்த புகார்:

"தமிழகத்தில் உள்ள பல்வேறு தொகுதிகளில் அதிமுகவைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு வாக்காளர் வீட்டிற்கும் சென்று அவர்களது வாக்காளர் அட்டை நகல்களையும் அவர்களின் செல்பேசி எண்களையும் பெற்று வருகிறார்கள். குறிப்பாக திமுக தலைவர் ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில், நேற்று இரவு பல்வேறு இடங்களில் அதிமுகவினர் வாக்காளர்களிடம் இருந்து அவர்களது அடையாள அட்டை விவரங்களையும், அவர்களது செல்பேசி எண்களையும் பெற்று வருகின்றனர். வாக்காளர்களுக்கு கூகுள் பே, போன் பே, பேடிஎம் ஆன்லைன் மூலமாக பணப் பட்டுவாடா செய்வதற்காக அவர்களது தொலைபேசி எண்களின் விவரங்கள் அதிமுகவினரால் பெறப்பட்டு வருகின்றன.

மேலும், தொகுதிக்கு வெளியே வாக்காளர்களை அழைத்து வந்து அவர்களுக்குப் பணப் பட்டுவாடா செய்வதற்கும் அதிமுக முயற்சி செய்து வருகிறது. இதுபோன்று தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தொகுதிகளில் அதிமுகவினர் முறைகேட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படை மற்றும் சோதனைச் சாவடிகளில், ஒருவரிடம் இருந்து பணத்தைக் கைப்பற்றுவதற்காக மட்டுமே சோதனை நடத்துவதோடு அல்லாமல் அவர்களிடம் வாக்காளர்களின் அடையாள அட்டை தகவல்கள் மற்றும் அவர்களது செல்பேசி எண் தகவல்கள் இருந்தால் அதனையும் கைப்பற்ற வேண்டும் என்று அவர்களுக்கு உரிய வழிமுறைகளை அறிவுறுத்த வேண்டும்.

அதிமுகவினரின் இதுபோன்ற தேர்தல் முறைகேடுகளைத் தடுக்காவிட்டால், அது நேர்மையான மற்றும் நியாயமான தேர்தலை பாதிக்கும். ஆகவே, இந்தப் புகார் மீது உடனடியாக சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் ஆணைய அலுவலர்களுக்கு உரிய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்''. இவ்வாறு புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஜெர்மனியிலிருந்து ஈழத் தமிழர்கள் சிலர் வெளியேற்றப்படும் அபாயம்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

**நீ**ண்ட காலமாக ஜெர்மனியில் வசிக்கும் ஒரு தொகுதி ஈழத் தமிழர்கள் இம்மாதம் 30 ஆம் திகதி சிறப்பு விமானம் ஒன்றின் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர் என்ற அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கு முன்னேற்பாடாக காவல்துறையால் பலர் கைது செய்யப்பட்டு பல இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று ஜெர்மன் மனித உரிமைகள் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியாக நடைபெறும் கைதுகளில் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்கிற தகவலை உறவினர்கள் பெற முடியாத நிலை உள்ளது என்று அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

எந்த காரணங்களின் அடிப்படையில் அவர்கள் அவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர், எங்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என்கிற விவரங்கள் எல்லாமே இரகசியாமாக வைக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் கைது செய்யப்பட்டவர்களில் 31 பேர் டுசல்டோர்ஃபிலும், 50 பேர் ஃபிராங்க்ஃபர்ட்டிலும், 11 பேர் ஸ்டுட்கார்ட்டிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அந்த மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கை கூறுகிறது. கைது செய்யப்பட்டுள்ளவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியாத நிலையில், இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என்று அந்த அமைப்பு அஞ்சுகிறது.


அண்மையில் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அதை மேற்குலக நாடுகள் தீவிரமாக ஆதரித்தன. இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள், போர்க்காலத்தில் இடம்பெற்றவைகளுக்குப் பொறுப்பு கூறுதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவை குறித்து அந்தத் தீர்மானம் பேசியது.

ஆனால் அந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஜெர்மனி இப்படியான சுற்றி வளைப்பு, கைதுகள், நாடு கடத்தும் எண்ணங்கள் ஆகியவை அதன் இரட்டை நிலைப்பாட்டைக் காட்டுகின்றன என்று விமர்சகர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மனித உரிமைகள் விடயத்தில் மேற்குலக நாடுகளின் "இரட்டை முகம்" இதன் மூலம் வெளியாகியுள்ளது என்று கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஒரு புறம் இலங்கையில் மனித நிலைமைகள் மோசமாகவுள்ளன, பன்னாட்டு விசாரணை தேவை, மத மற்றும் கலாச்சார உரிமைகள் நசுக்கப்படுகின்றன, நில அபகரிப்புகள் தொடருகின்றன என்றெல்லாம் சர்வதேச மட்டத்தில் மேற்குலக நாடுகள் ராஜபக்சக்கள் அரசுக்கு எதிராக குரல் கொடுக்கின்றன. ஆனால் நாட்டிலிருந்து பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக உயிருக்கு அஞ்சி பல நாடுகளில் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது எனும் செயல்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்று புலம்பெயர் அமைப்புகள் கூறுகின்றன.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் மிகவும் சர்ச்சைக்குரிய குடியேற்றம் தொடர்பான சட்டம் ஒன்றை ஜெர்மனிய அரசு கொண்டுவந்தது. அந்தச் சட்டம் ஜெர்மனியில் அகதித் தஞ்சம் கோரி அது நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்த வழி செய்கிறது. அதுமட்டுமின்றி அந்தச் சட்டம் காவல்துறை மற்றும் குடிவரவு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது.


பாராளுமன்றம்
PARLIAMENT
G. G. PONNAMBALAM M.P.
(JAFFNA ELECTORAL DISTRICT)
"GITANJALI", NO. 15, QUEEN'S ROAD, COLPETTY, COLOMBO 00300

27 March 2021

To the German government,

Through the International Human Rights Association Bremen.

URGENT APPEAL TO STOP DEPORTATION OF TAMIL ASYLUM SEEKERS

We are very disturbed to hear that the German government is planning to carry out a mass deportation of Tamil asylum seekers on the 30th March 2021. Apart from the anguish and fear this will cause the Tamil Diaspora in Germany, it will have a very negative effect on the current international efforts to address serious human rights violations that have occurred and are continuing to occur in Sri Lanka. It is shocking that Germany, within a week of co-sponsoring a resolution alleging rights violations by the Sri Lankan government at the United Nations Human Rights Council would send the complete opposite message by planning the deportation of possibly a hundred Tamil asylum seekers into the hands of the very government they are seeking asylum from, especially given the very serious deterioration of human rights since the present government came into office.

Accordingly we call upon the German government to immediately halt this most ill considered decision that will most definitely put those asylum seekers' lives in harms way.

G. G. PONNAMBALAM M.P.

கடந்த ஜனவரி 29ஆம் திகதி ஜெர்மன் அரசின் மனித உரிமைகள் கொள்கை மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான ஆணையர் பாபேல் காஃப்லர் அரசை தனது டிவிட்டரில் பாராட்டியிருந்தார்.

"நேற்று ஐநா மனித உரிமைகள் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் - இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சூழல் குறித்து பாரதூரமான கவலைகளை அளிக்கிறது - என்று கூறியுள்ளது. இந்நிலையில் ஜெர்மனி தொடர்ந்தும் இணக்கப்பாடு பொறுப்பு கூறுதல் ஆகியவற்றுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும், மேலும் ஐ நா மனித உரிமைகள் குழுவுக்கும் இது தொடர்பில் ஜெர்மனி ஆதரவளிக்கிறது என்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்".

இப்படியான பின்புலத்தில் ஈழத் தமிழர்கள் சிலரை ஜெர்மனியிலிருந்து வெளியேற்றும் முடிவு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் அதிர்ச்சி மற்றும் மேற்குலக நாடுகள் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் நிலவும் மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்க பன்னாட்டு விசாரணையாளர்கள் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்று கூறிய ஜெர்மனி, அதேவேளை நூற்றுக்கும் அதிகமானவர்களை இலங்கைக்கு நாடுகடத்துகிறது.

"இது தான் ஜெர்மனியில் மனித உரிமைகள் தொடர்பிலான நிலைப்பாடா"? என்று அந்த அமைப்பு கேள்வி ஒன்றையும் முன்வைத்துள்ளது. மனித உரிமை ஆர்வலர்கள், அமைப்புகள் அல்லது பன்னாட்டு அமைப்புகள் இது தொடர்ப்கா ஒரு கானொளியையோ அல்லது எழுத்து மூலமான ஒரு அறிக்கையையோ தமது விரைவாக அனுப்புமாறு ஜெர்மன் மனித உரிமைகள் அமைப்பான ஐ எச் ஆர் ஏ கோரியுள்ளது.




இதையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடிதமொன்றை ஜெர்மன் அரசுக்கு எழுதியுள்ளார்.

அதில் இந்த விஷயம் தமக்கு ஆழ்ந்த கவலையளிப்பதோடு, இலங்கைக்கு எதிராகப் பன்னாட்டு அமைப்புகள் முன்னெடுத்து வரும் நடவடிக்கைக்கு எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார். ஜெர்மன் அரசு இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரியுள்ளார்.

ஜெர்மனியில் வாழும் ஈழத் தமிழர்கள் யாராவது காணாமல் போயிருந்தாலோ அல்லது கைது செய்யப்பட்டிருந்தாலோ உடனடியாக கீழ்க்கண்ட விலாசம், தொலைபேசி, தொலை நகல், மின்னஞ்சல் மூலம் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு The International Human Rights Association Bremen (IMRV) கேட்டுள்ளது.

IMRV Bremen,
Kornstr. 31
28201 Bremen, Germany.
Fax: 0049 421 68 437 884, Email: imrvbremen@gmail.com

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்பந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணியில் நிலம் பற்றிய உரையாடல்கள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



*பகுதி - 2*

பல மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட சைவ அறக்கட்டளை ஒன்றின் நிறுவனர் என்னோடு உரையாடினார். வலிகாமம் பகுதியில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் யாழ் கட்டளை தளபதி தெரிவித்த ஒரு விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார். பலாலி முகாமை அண்டிய பகுதிகளில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணிகளில் ஒரு பகுதியில் தமிழ்மக்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை என்பதை சுட்டிக்காட்டிப் பேசிய மேற்படி படை அதிகாரி தமிழ் மக்கள் காணிகளை விடுவிக்குமாறு கோரி ஒருபுறம் போராடுகிறார்கள் இன்னொருபுறம் விடுவிக்கப்பட்ட காணிகளில் குடியமரவில்லை என்ற தொனிப்பட உரையாற்றியிருக்கிறார். இதைச் சுட்டிக் காட்டிய மேற்சொன்ன சமயப் பெரியார் இக்காணிகளில் பெரும்பாலானவை புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்குரியவை என்றும் அதனால்தான் அங்கே மீளக் குடியேற்றம் நடக்கவில்லை என்றும் கூறினார்.

அப்பொழுது அவரிடம் நான் சொன்னேன் "ஒருபுறம் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு காணியற்ற மக்கள் இருக்கிறார்கள். சாதி ஒடுக்குமுறைக்கும் நில உடமைக்கும் தொடர்பு உண்டு. தாயகத்தை அரசாங்கம் ஆக்கிரமிக்கிறது என்று கூறும் தமிழ்தேசிய தரப்புக்கள் அதாவது நில ஆக்கிரமிப்பு குறித்து பேசும் தமிழ்தேசிய தரப்புகள் தமது சமூகத்திற்குள்ளேயே நிலமற்ற மக்களைக் குறித்து பெரியளவில் உரையாடுவது இல்லை. குறிப்பாக மக்கள் மீளக்குடியேறாத பெரும்பாலான காணித்துண்டுகள் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்குரியவை. இந்த நிலத்துண்டுகளை அவர்கள் தாமாக விரும்பி நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கலாம். உதாரணமாக இந்திய சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் வினோபா உருவாக்கியது போன்ற பூமிதான இயக்கம் ஒன்றை உருவாக்கி இது தொடர்பில் செயற்படலாம்தானே? என்று.

இது நடந்து சில மாதங்களின் பின் உலகப்புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளரான மைக்கல் ஒண்டாச்சி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவரை அழைத்துக் கொண்டு என்னிடம் வந்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையைச் சேர்ந்த கலாநிதி சனாதனன் என்னிடம் கேட்டார் ஊர் காவற்றுறையை சுற்றி பார்க்க விரும்புகிறார் நீங்களும் வருகிறீர்களா? என்று. மூவரும் ஊர்காவற்றுறைக்கு போனோம்.

இலங்கைத் தீவிலேயே ஆட்களற்ற வீடுகளை அதிகமாகக் கொண்ட ஒரு பகுதியாக தீவுப் பகுதியைக் கூறலாம். குறிப்பாக ஊர்காவற்றுறையில் மேல் நடுத்தர வர்க்கம் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெரும்பாலான வீடுகள் ஆட்கள் இன்றி புதர்மண்டி காணப்படுகின்றன. அந்த வீடுகளை சுட்டிக்காட்டி மைக்கல் ஒண்டாச்சி என்னிடம் கேட்டார் "இந்த வீடுகளின் உரிமையாளர்கள் எங்கே" என்று. நான் சொன்னேன் "இது ஆதித்தமிழ்க் கத்தோலிக்கம் அதிகம் செழிப்பாக காணப்பட்ட ஒரு பிரதேசம். ஒரு காலம் இப்பகுதி அதாவது ஊர்காவற்றுறை தேவாலயங்களின் நகரம் என்று அழைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அது ஆட்களற்ற வீடுகளின் நகரமாக மாறிவிட்டது. இந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் புலம் பெயர்ந்து விட்டார்கள் அல்லது தொழில் மற்றும் கல்வி வைபுக்களைத் தேடி யாழ் நகரை நோக்கி இடம் பெயர்ந்து விட்டார்கள்" என்று. "அவர்களில் அநேகர் வசதியானவர்கள். கொழும்பிலும் யாழ். நகரப் பகுதியிலும் கொழும்பிலும் அல்லது உலகின் பல பாகங்களிலும் அவர்களுக்கு வசிப்பிடங்கள் உண்டு. எனவே அவர்கள் பெரும்பாலும் திரும்பி வர வாய்ப்புகள் இல்லை" என்று. இது தீவுப்பகுதியில் இருக்கக்கூடிய பெரும்பாலான தீவுகளுக்கு பொருந்தும்.

இது நடந்து சில மாதங்களின் பின் நோர்வேயில் வசிக்கும் நண்பர் ஒருவரின் தந்தையார் இறந்தபொழுது நான் சாவீட்டுக்குப் போயிருந்தேன். நண்பர் ஊர்காவல்துறையைச் சேர்ந்த மெலிஞ்சிமுனை கிராமத்தைச் சேர்ந்தவர். தந்தையின் சாவு வீட்டுக்கு அவரும் வந்திருந்தார். சாவு வீடு கரம்பன் பகுதியில் பிரதான சாலைக்கு அருகே உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது. மெலிஞ்சிமுனை கிராமம் பெருமளவுக்கு இடம்பெயர்ந்து கரம்பன் பகுதிக்கு வந்து விட்டது. அங்கே நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்த பொழுது இப்பொழுது புலம்பெயர்ந்து வாழும் மற்றொரு மெலிஞ்சிமுனை கிராமத்தைச் சேர்ந்தவர் கூறினார்... கரம்பன் பகுதியில் உள்ள வீடுகளை காணிகளை நாங்கள் வாங்க முயற்சிக்கிறோம். ஆனால் வீட்டின் உரிமையாளர்கள் அவற்றை விற்க தயாரில்லை. சாதி ஒரு காரணம். காணி உறுதிகளை பங்கு தந்தையிடம் அல்லது திருச்சபையைச் சேர்ந்தவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். ஆனால் திருச்சபை அந்த காணிகளை பெரும்பாலும் பராமரிப்பதில்லை. புதர் மண்டி கிடக்கும் இந்தக் காணிகளை பராமரிப்பதற்கும் அக்காணிகளில் தற்காலிகமாகத் தங்கி இருக்கும் வெளிக் கிராமங்களைச் சேர்ந்த மக்களை அனுமதிக்கும் வீட்டு உரிமையாளர்கள் காணிகளையும் வீடுகளையும் அந்த ஏழைகளுக்கு விற்பதற்கு தயாரில்லை" என்று சொன்னார்.

இதே பிரச்சினை புங்குடுதீவிலும் உண்டு. ஒரு காலம் சாதிரீதியாக தாழ்த்தப்பட்ட மக்கள் இப்பொழுது மேற்படி ஆட்களற்ற வீடுகளில் தற்காலிகமாக வசித்து வருகிறார்கள். ஆனால் அந்த வீடுகளை அவற்றின் உரிமையாளர்கள் விற்பதற்கு தயாரில்லை. யாரையாவது வாடகைக்கு இருத்தி அல்லது தற்காலிகமாக இருத்தி காணிகளையும் வீடுகளையும் பராமரிக்க நினைக்கிறார்கள். ஆனால் அவற்றை மேற்படி தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு விற்கத் தயார் இல்லை. தற்காலிக குடியிருப்பாளர்களுக்கும் அவற்றை வாங்கும் நிதிப்பலம் இல்லை.யாழ்ப்பாணத்தில் மொத்தம் 4600 குடும்பங்களுக்கு சொந்த நிலம் இல்லை.வடபகுதி முழுவதும் மொத்தம் 10000 குடும்பங்களுக்கு சொந்த நிலம் இல்லை.

ஒரு புறம் தமிழ்மக்கள் நில ஆக்கிரமிப்பு பற்றிப் பேசுகிறார்கள். அனைத்துலக மெய்நிகர் சந்திப்புக்களை நிகழ்த்துகிறார்கள். ஆனால் தேசிய விடுதலை என்பது சமூக விடுதலையையும் உள்ளடக்கியதுதான் என்ற அடிப்படையில் சிந்தித்து நிலமற்ற மக்களுக்கு நிலத்தையும் வீடற்ற மக்களுக்கு வீடுகளையும் வழங்குவதற்கு எத்தனை பேர் தயார்?

இதுதொடர்பில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை ஊக்குவித்து காணிகளையும் வீடுகளையும் தேவைப்படும் மக்களுக்கு வாங்கி கொடுப்பதற்கு உரிய ஒரு நிறுவனக் கட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது. நிலத்துக்காக போராடும் தமிழ் மக்கள் தனது சமூகத்திற்கு உள்ளேயே வாழும் நிலமற்ற மக்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். இல்லையென்றால் நிலத்துக்கான போராட்டம் அதன் ஆன்மாவை இழந்துவிடும்.


இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட பலாலி படைத்தளத்தின் அதிகாரி கூறிய அந்த விடயத்துக்கு திரும்ப வரலாம். அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பல தசாப்த காலமாக வலிகாமத்திலும் வடமராட்சியிலும் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டார்கள். 1200 குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை. இதில் 300 குடும்பங்களுக்கு சொந்தமாக நிலம் இல்லை. அதாவது நாலில் ஒரு பகுதியினர். அவர்கள் இடப்பெயர்வுக்கு முன்பு யாருடையதோ காணிகளில் கூலி உழைப்பாளிகளாக வாழ்ந்தார்கள். இடப்பெயர்வின் பின் இப்பொழுது முகாம்களை அண்டிய பகுதிகளில் தமது தொழில் துறைகளை விருத்தி செய்து கொண்டு விட்டார்கள். தவிர அவர்களுடைய பிள்ளைகள் வளர்ந்து படித்து அப்பகுதிகளிலேயே தொழில் தேடி கொண்டுவிட்டன. திருமணம் செய்துவிட்டன. எனவே தாம் வேர் விடாத ஒரு நிலப்பகுதிக்கு திரும்பிச்செல்ல இந்த மக்கள் தயாரில்லை. தாம் பல தசாப்தங்களுக்கு முன்பு வாழ்ந்த நிலத் துண்டுகளை தமது பூர்வீக பிரதேசம் என்றோ பாரம்பரிய தாயகம் என்றோ கூறுமளவுக்கு அவர்களுக்கு அது சொந்தமாகவும் இல்லை. அது குறித்து வேரோடிய நினைவுகளும் இல்லை. இந்நிலையில் தங்களுக்கென்று ஒரு துண்டு காணியும் இல்லாத ஓர் இடத்துக்கு அவர்கள் ஏன் திரும்பி போக வேண்டும்?

இதனால்தான் அந்த மக்கள் மீளக்குடியமர விருப்பமின்றி தற்காலிக முகாம்களில் தொடர்ந்தும் இருக்கிறார்கள். அரசாங்கம் காணிகளை வாங்குவதற்கு என்று நாலு லட்சம் ரூபாய்களை உதவியாக கொடுக்கிறது. ஆனால் ஆகக் குறைந்தது எட்டு லட்சம் ரூபாய் அதற்கு தேவை என்று ஒரு கணிப்பு உண்டு.

இது விடயத்தில் குறைந்தபட்சம் நிதிரீதியாக அந்த மக்களை பலப்படுத்தி மீளக் குடியமர்த்தும் திட்டங்கள் எவையும் தமிழ்த்தரப்பிடம் கிடையாது. இது குறித்து சிந்தித்து செயல்படும் தொண்டு நிறுவனங்களோ அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களோ செயற்பாட்டு நிறுவனங்களோ தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது. வவுனியாவை மையமாகக் கொண்டியங்கும் மாற்றம் நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட ஒரு நூலில் இது தொடர்பில் அறிக்கையிட்டிருகிறது. மேற்கண்டவற்றை தொகுத்துப்பார்த்தால் ஒரு தெளிவான சித்திரம் கிடைக்கிறது. தாயகம் குறித்தும் நிலம் குறித்தும் நில அபகரிப்பு குறித்தும் பேசும் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தரப்புக்களிடம் சமூக விடுதலை குறித்து பொருத்தமான தரிசனங்கள் இல்லை என்பதே அது. தேசியம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தை பெரிய திரளாக கூட்டிக் கட்டுவது. எந்த அடிப்படையில் அவ்வாறு மக்களைத் திரள் ஆக்குவது? இனத்தின் பெயராலோ மொழியின் பெயராலோ ஒடுக்குமுறயின் பெயராலோ மட்டுமல்ல பாரம்பரிய தாயகத்தின் பெயரால் ஒரு மக்கள் கூட்டத்தை திரட்டிக்கட்டுவது என்றால் அந்த தாயகத்தில் அந்த நிலத்தில் அவர்களுக்கு வேர் இருக்க வேண்டும். சொந்தக் காணி இருக்கவேண்டும். பாரம்பரிய தாயகம் என்பது நிலத்தில் வேரோடிய கூட்டு நினைவுதான். அதை தமிழ்தேசிய தரப்புக்கள் உறுதிப்படுத்தவேண்டும். தாயகம் என்று சொல்லிக்கொண்டு ஒரு துண்டு நிலம் கூட இல்லாத ஒரு தொகை மக்களை நலன்புரி நிலையங்களில் வைத்துக்கொண்டு நில அபகரிப்பு பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.

எனவே புலம்பெயர்ந்த தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து ஆளற்ற வீடுகளையும் பூதம் காக்கும் காணிகளையும் நிலமற்ற மக்களுக்கு வழங்க உடனடியாக ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இக்கட்டுரையின் முதலாவது பகுதியில் நிலம் தொடர்பான உரையாடல்களில் புலம்




பெயர்ந்த தமிழ் மக்களின் பங்களிப்பு குறித்து பார்த்தோம். இப்பொழுது இரண்டாவது பகுதியில் பேசப்படும் தாயகத்தில் நிலமற்ற மக்கள் விடயத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பு அதிகரித்த பங்களிப்பை செய்ய வேண்டியிருக்கும். என்றால் அவர்களுடைய காணிகளும் வீடுகளும்தான் புதர் மண்டிக் கிடக்கின்றன. ஆளற்ற தீவுகளில் ஆலயங்களை கட்டுவதற்கும் புனரமைப்பதற்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை கொட்டும் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தாயகத்தை உயிருள்ள விதத்தில் கட்டியெழுப்ப நில்மற்ற மக்களுக்கு நிலத்தையும் வீடுகளையும் வழங்க முன்வரவேண்டும்.

தீவுப்பகுதியில் மட்டுமில்லை யாழ்ப்பாணத்தின் பல குக்கிராமங்களில் ஆளற்ற வீடுகளையும் உரிமையாளர் இல்லாத காணிகளையும் காணமுடியும்.

இதுதொடர்பில் சரியான புள்ளிவிபரங்கள் எவையும் தமிழ் தொண்டு நிறுவனங்களிடம் இல்லை. ஏன் அதிகம் சொல்வான் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு பலமான தமிழ் தொண்டு நிறுவனமே தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது.

ஆயுதப் போராட்டத்தின் தொடக்க கால கட்டங்களில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம் இருந்தது. காந்தியம் இருந்தது. காந்தியத்துக்கும் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையிலான துரதிர்ஷ்டவசமான தொடர்பு காரணமாக அந்த இயக்கம் பின்னர் அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் வவுனியா மாவட்டத்தில் குறிப்பாக எல்லையோரங்களில் காந்தியம் முன்னெடுத்த குடியேற்ற முயற்சிகள் மகத்தானவை. வவுனியாவை ஒரு தமிழ் தேர்தல் தொகுதியாக பலமாக பேணுவதற்கு காந்தியம் முன்னெடுத்த குடியேற்ற முயற்சிகளும் ஒரு காரணமே. எனவே காந்தியத்தை போன்ற நிறுவனங்களை மீள உயிர்ப்பித்து வினோபா சிந்தித்ததை போலவோ அல்லது புதிய நிலைமைகளுக்கு ஏற்ப புதிதாக சிந்தித்தோ நிலமற்ற தமிழர்களுக்கு நிலத்தையும் வீடுகளையும் வழங்கும் ஒரு நிறுவனமயப்பட்ட சிந்தனை அவசியம்.



# மன்னாரில் தேங்காய் எண்ணை கலப்படம் தொடர்பாக பாவனையாளர் சபையினரால் மாதிரிகள் சேகரிப்பு

நடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் தேங்காய் எண்ணை கலப்படம் தொடர்பான பிர்ச்சினைகளை குறைக்கும் வகையில், மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்களில் பாவனை-யில் உள்ள தேங்காய் எண்ணைகளின் மாதிரிகளை பெற்று கொள்ளும் செயற்திட்டம் மத்திய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஏற்பாட்டில் இன்று திங்கட் கிழமை காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

மாவட்ட ரீதியாக உள்ள மொத்த மற்றும் பிரதான விற்பனை நிலையங்களில் மேற்படி மதிரிகள் சேகரிக்கப்பட்டு இன்றைய தினம் தேசிய பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுள்ளது.

மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளின் ஒழுங்கமைப்பில் கலப்படம் மற்றும் அங்கிகரிக்கப்படாத எண்ணைகள் தொடர்பாக ஆரயப்பட்டதுடன் சந்தேகத்துக்குறிய எண்ணைகளின் மாதிரிகளும் பெறப்பட்டுள்ளது.

மேற்படி பெறப்பட்ட மாதிரிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு கொழும்பில் உள்ள தேசிய பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அத்துடன் தேசிய பகுப்பாய்வு திணைக்களத்தினூடாக மாதிரிகளில் கலப்படம் உறுதி செய்யப்படும் பட்சத்தில் விற்பனையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**- மன்னார் நிருபர் (29-03-2021)**







# நுண் நிதிக் கடனிலிருந்து பெண்களை பாதுகாக்க மன்னாரில் விழிர்ப்புணர்வுப் போராட்டம்




நுண் நிதி கடனில் இருந்து பெண்களை பாதுகாக்க கோரி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக விழிர்ப்புணர்வு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ. பெனடிற்குரூஸ் தலைமையில் குறித்த விழிர்ப்புணர்வு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பாதீக்கப்பட்ட மக்கள் பெற்றுக்கொண்ட நுண் நிதி கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் நுண் நிதி கடன் வழங்குவதை நிறுத்தக் கோரி-யும் குறித்த போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் வளர்பிறை பெண்கள் அடைப்பின் மாவட்ட இணைப்பாளர் ரி. பிரியந்தா உற்பட பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

குறித்த போராட்டம் வடக்கு கிழக்கு உற்பட 17 மாவட்டங்களில் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**- மன்னார் நிருபர் (30-03-2021)**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# ஐ.நா தீர்மானம் கொண்டாடத்தக்கதா?

- தீபச்செல்வன்

ஸ்ரீலங்கா அரசால் ஈழ மண்ணில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைப் போர் குறித்த தீர்மானம் கடந்த 23 ஆம் திகதி ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில், அனைத்து மக்களின் நல்லிணக்கத்திற்கும், மனித உரிமைகளுக்கும் ஸ்ரீலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள குறித்த தீர்மானம், "இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, பாரபட்சமற்ற முறையில், நேர்மையான விசாரணை நடத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்கின்ற விதமாக அமைந்தது. இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் என்ற வகையில் இது நிறைவேற்றப்பட்டாலும் இதில் ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதே முக்கியமானது.

ஐக்கிய நாடுகள் சபையில் இதுவரையில் ஸ்ரீலங்கா அரசின் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்ற அடிப்படையில், மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக ஸ்ரீலங்காவில் நடைபெற்ற ஆட்சி மாற்றங்களினால் இந்த தீர்மானங்கள் கால ஓட்டத்தில் தோல்வியை அடைந்திருக்கின்றன. இந்த நிலையில் 2021ஆம் ஆண்டில் மார்ச் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஜெனீவா மனித உரிமை பேரவையில் பிரித்தானியா தலைமையிலான நாடுகளினால் ஸ்ரீலங்கா அரசு தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா சபையில் இத் தீர்மானத்தை 22 நாடுகள் ஆதரித்து வாக்களித்துள்ளன. அத்துடன் 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்துள்ளன.

அத்துடன் 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்திருக்கின்றன. இலங்கையில் பொறுப்புக்கூறலை ஏற்படுத்த வேண்டும் என்றும் நல்லிணக்கத்தை மீள கொண்டு வரவேண்டும் என்றும் கருதியே தீர்மானத்தை கொண்டு வந்திருப்பதாக பிரிட்டன் கூறுகிறது. எனினும் இந்த தீர்மானம் தம்மீதான அத்துமீறிய அரசியல் தலையீடாகவும் இதனை கடுமையாக எதிர்ப்பதாகவும் ஸ்ரீலங்கா அரசு கூறியிருக்கிறது. அத்துடன் சீனாவும் ரஷ்யாவும் இந்த தீர்மானத்தை கடுமையாக எதிர்த்திருந்தது. மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் பொறுப்புக்கூறலிலும் இலங்கையின் ஈடுபாட்டை தாம் வரவேற்பதாக பாக்கிஸ்தான் கூறியிருந்தது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு இரட்டை நிலைப்பாடு உள்ளது என்றும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத இந்தியா தன்னுடைய நிலைப்பாட்டை அறிவித்திருந்தது. இந்த நிலையில் ஜெனீவா தீர்மானத்தில் ஈழத் தமிழ் மக்கள் வலியுறுத்திய முக்கிய விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்சத்திலேயே அது நாம் கொண்டாடத்தக்க ஒரு தீர்மானமா என்பதை அறிந்து கொள்ள முடியும். ஸ்ரீலங்கா அரசு தீர்மானத்தை எதிர்ப்பதனால் மாத்திரம், அது நமக்கு ஆதரவான, பலன் தருகின்ற தீர்மானம் ஆகிவிடாது.

தமிழீழத்தை எதிர்க்கின்ற ஸ்ரீலங்கா அரசு, 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் கடுமையாக எதிர்க்கின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்வியும் அது தொடர்பில் இன்றைய ஆட்சியாளர்கள் விடுக்கின்ற கதைகளும் இதற்கு நல்ல வெளிப்பாடு. இதேபோலவே ஸ்ரீலங்கா அரசாங்கம், ஜெனீவாவின் தீர்மானத்தையும் அணுகுகிறது. அதாவது பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் என்ற விடயத்தில் உள்ளக விசாரணையை நடத்துங்கள் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு ஐ.நா அவை கூறுவது கூட ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக இருக்கிறது என்றால், ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் எந்தளவுக்கு புறக்கணிக்கப்படுகின்றது என்பதையும் நாம் உணர வேண்டும்.

அதேபோல ஐ.நா கூறுகின்ற எதையும் ஏற்றுக்கொள்ளாத அரசினை வைத்து, இந்த பன்னாட்டு சமூகம் எதனை சாதிக்கப் போகின்றது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையின் முன் வரைபு வெளியான சமயத்தில், தமிழ் தலைமைகளும் போராடும் மக்களும் சில பரிந்துரைகளை முன் வைத்து போராட்டங்களையும் நடாத்தி இருந்தார்கள். குறிப்பாக ஈழத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன் வைத்த கோரிக்கையும் இங்கே நினைவுபடுத்தத்தக்கது. காணாமல் போனோர் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையும் ஐ.நா சபையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என வடக்கு மாகாண சபையும் தமிழ்நாடு சட்டமன்றமும் தீர்மானங்களை இயற்றியிருந்தன. இரண்டு பொதுமக்களின் சபைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியது ஐ.நாவின் பொறுப்பாகும். அத்துடன் இனப்படுகொலைக்காக சர்வதேச விசாரணை நடாத்த வேண்டும், ஸ்ரீலங்கா அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தப்பட்ட நிலையில், ஐ.நாவின் தீர்மானம் ஸ்ரீலங்கா அரசை மயிலிறகால் தடவும் வகையில் அமைந்துள்ளது. ஸ்ரீலங்கா அரசுக்கும் அது இளைத்த கொடுமைகளுக்கும் அது தொடர்பானவர்களும் பங்கம் விளைவிக்காத வகையிலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் இந்த தீர்மானத்தை ஈழத் தமிழ் மக்கள் எதிர்க்க வேண்டும் என பொருள் கொள்ள வேண்டியதல்ல. இனப்படுகொலைக்கான நீதிக்கான செயற்பாட்டில் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டும், பெரும் படிகளை ஏறி மதிக்க வேண்டும் என்பதை நாம் மறக்க கூடாது. உண்மையில் இத் தீர்மானம், இனப்படுகொலைக்கான நீதி தமதிக்கப்படுகிறதே தவிர, ஒருபோதும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்காது. இந்த தீர்மானம் ஸ்ரீலங்கா அரசுக்கு சார்பானதாகவே இருக்கிறது. ஏனெனில் தமிழர்களின் கோரிக்கையை முற்றாக நிராகரித்திருக்கிறது.

ஐ.நா அறிக்கையில் 16 சரத்துக்கள் அல்லது விடயதானங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில ஸ்ரீலங்கா அரசை பாராட்டும் விதமாகவும் அமைந்திருப்பதுடன் விடுதலைப் புலிகள் தொடர்பான எதிரான அல்லது தவறான புரிதல்களை கொண்டவையாகவும் இருக்கின்றன. இந்த நிலையில் நடைமுறை பந்தி 6இல் சாட்சியங்களை சேகரிப்பதற்கான ஒழுங்கு குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில்கூட ஐ.நா அறிக்கைகளில் மாத்திரமின்றி, இலங்கை அரசின் ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில்கூட இடம்பெற்றதாகவும் அதனால் இலங்கை இனப்படுகொலைக்கான நீதியை பெறுகின்ற எந்தவொரு முன்னேற்றமும் நடக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்பது தமிழர்களின் கோரிக்கை உள்ளக விசாரணையை ஒருபோதும் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளக்வில்லை. ஏனெனில் உள்ளக விசாரணையை ஸ்ரீலங்கா அரசு ஏற்கவும் இல்லை. நடைமுறைப்படுத்தவும் இல்லை. ஐ.நா மனித உரிமை பேரவையை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் எவ்வாறு உள்ளக விசாரணையை ஐ.நாவால் நடத்துவிக்க முடியும்? அப்படிப் பார்கின்ற போது ஐ.நாவில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதாக கூறப்படும் தீர்மானம், ஐ.நாவுக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் தோல்வியாகவே இருக்கிறது.

இத்தகைய ஒரு தீர்மானத்தை ஈழத் தமிழர்கள் ஒருபோதும் கொண்டாட முடியாது. இனப்படுகொலைக்கான நீதி என்பது களியாட்டத்திற்கும் கொண்டாட்டத்திற்கும் உரியதல்ல. அந்த வழிமுறைகளாலும் அதனை பெற்றுவிட முடியாது. அதற்கேற்ப ஈழத் தமிழினம் போராட வேண்டிய பொறுப்பை கொண்டிருக்கிறது. உலகத் தமிழர்கள் ஆதரிக்க வேண்டிய நியாயத்திலும் உறவிலும் உள்ளனர்.




Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுழற்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222


சமூக ஒன்றுகூடல்கள்
பயங்கரமான
விளைவுகளை
ஏற்படுத்தலாம்.
COVID-19 பரவுவதைத் தடுக்க
வீட்டில் தங்கியிருங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும்
அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

**SHANKAR & CO**

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

Open to the public, including:
Contractors, cleaners, building maintenance providers and more.
We stock a full line of COVID19 Protective Products

- Commercial Vacuum Cleaners
- Industrial Blowers
- Floor Machines & accessories







Cold Foggers & Sprayers for COVID

வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கு எமது அழைப்பு

உங்கள் சுத்திகரிப்பு மற்றும் Building Maintenance வேலைகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் போதிய கையிருப்பில் எம்மிடம் உள்ளதால் நீங்கள் குறைந்த விலைகளில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
இந்த விளம்பரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

A&B Supplies
Serving York Region for over 30 years

500 Alden Road, Unit 12, Markham | Tel: (905) 513-6940 | www.anbsupplies.com

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம்
உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



## உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.
உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**





| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*

# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!

RE/MAX®




Four Sixteen Whitby Condos
Kalaido Corporation and DC and F Corp


Old Colony Estates
Falconcrest Homes


Hillsborough
Andrin Homes


Anchor Woods
Regal Crest Homes


Anchor Woods By Andrin Homes
Andrin Homes


Hometown Sharon Village
Acorn Developments and Menkes Developments Ltd and Fernbrook H...


Blue Sky
Fieldgate Homes


Universal City Condos 4
Chestnut Hill Developments


U.C. Homes
Tribute Communities


Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.


On the Mark Towns
Stateview Homes


Angus Glen South Village Homes
Kylemore Communities


Victory Green Homes
Remington Homes


Nao Towns
Stateview Homes

**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# ”அதிகாரப் பகிர்வு என்ற போர்வையின் கீழ் பிரிவினை வாதம்” அறிமுகப்படுத்துவதை அனுமதிக்க முடியாது!

**கனடா நக்கீரன்**

கழுதைக்கு உபதேசம் காதிலில் ஓதினாலும் அவலச் சத்தமே அன்றி வேறு சத்தம் வராது. எழுபது ஆண்டுகளுக்கு மேலாக புரையோடிப் போய்விட்ட இனச் சிக்கலுக்கு அதியுச்ச அதிகாரப் பகிர்வே பொருத்தமான தீர்வாக அமையும் எனத் தமிழர் தரப்பு கூறிவருகிறது. அதாவது 13ஏ சட்ட திருத்தத்தை முழுமையாக - காணி மற்றும் காவல்துறை அதி-காரம் உட்பட - நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தக் கோரிக்கை கடந்த பல சகாப்தங்களாக இருந்து வருகிறது. ஆனால் சிறிலங்கா அதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை. மாறாக 13 ஏ சட்ட திருத்தத்தை, அதன் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை, நீக்கிவிட இன்றைய ஆட்சியாளர்கள் தீவிரமாக யோசிக்கிறார்கள்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரி-மைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் முக்கிய நாடுகளான . ஐக்கிய இராச்சியம், கனடா, ஜெர்மனி, வடக்கு மசிடோனியா, மொண்டினீக்ரோ மற்றும் மாலாவி - சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே.

அந்தத் தீர்மானம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் தீர்மானத்துக்கு அமெரிக்கா இணை அனுசரணை வழங்குவதாக குறிப்பிடப்பட்டது.

சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக 24 நாடுகளும், எதிர்த்து 11 நாடுகளும் 14 நாடுகள் நடுநிலை வகித்திருந்தன. இந்த வாக்கெடுப்பில் நடுநிலை வகித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். வாக்கெடுப்புக்கு முன்னர் இந்தியாவின் நிரந்தர தூதுவராலய முதல் செயலா-ளர் பவன்குமார் பாதே **(Pawankumar Badhe)** ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் -

இந்தியா அண்டை நாடு என்ற முறை-யில் 2009 க்குப் பிறகு இலங்கையில் நிவாரணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பணிகளுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

ஒன்று, இலங்கைத் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, சுயமரியாதை மற்றும் அமைதிக்கு எங்கள் ஆதரவு. மற்றது இலங்கையின் ஒற்றுமை, உறுதிப்பாடு மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டை உறுதி செய்துள்ளது.

இந்த இரண்டு குறிக்கோள்களும் ஒன்றுக்கொன்று ஆதரவளிப்பதாக நாங்கள் எப்போதும் நம்புகிறோம். ஒரே நேரத்தில் இரு குறிக்கோள்களையும் நிவர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் முன்னேற்றம் உறுதி செய்யப்படுகிறது.

நல்லிணக்க செயல்முறையை முன்னெடுத்துச் செல்லவும், தமிழ்ச் சமூகத்தின் வேட்கைகளை நிவர்த்தி செய்யவும், அதன் அனைத்து குடிமக்களின் அடிப்படை சுதந்திரங்களும் மனித உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யவும் சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து ஆக்கபூர்வமாக ஈடுபடுமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதன் மூலமும் அனைத்து மாகா-ண சபைகளும் திறம்பட செயல்பட முடியும் என்பதை உறுதிசெய்வது உட்பட, இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் படி. அரசியல் அதிகாரப் பகிர்வு குறித்த தனது உறுதிப்பாட்டை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்திற்கான பன்னாட்டு சமூகத்தின் வேண்டுகோளை இந்தியா ஆதரிக்கிறது.

இந்தியா சிறிலங்காவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் என சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன என்ற நம்பிக்கையை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஐநாமஉ பேரவைக் கூட்டத்தின் போது மிக நெருங்கிய அண்டைய நாடான சிறிலங்காவின் ஆட்புல ஒருமைப்பாட்டையும் அதன் இறையாண்மையையும் பாதுகாப்பதற்கு இந்தியா உறுதியளித்துள்ளது என வெளியுறவு செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்திருந்தார்.

மேலே கூறியவாறு இந்தியா வாக்களிப்பதைத் தவிர்த்திருந்தாலும் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துதல் மற்றும் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வுக்கான ஓரளவு உத்தரவாதம் அளிக்கும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான தீர்மானம் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் அழைப்பை இந்தியத் தூதுவர் ஆதரித்துப் பேசியிருந்தார்.

ஆனால் சிறிலங்காவின் ஆட்சியாளர்களது எதிர்பார்ப்புக்கு எதிராக இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்தது அவர்களது கோபத்தைக் கிளறியுள்ளது.

முக்கியமாக சிறிலங்காவின் சனாதிபதி கோட்டபாய இராசபக்ச நெற்றிக் கண்ணைத் திறந்துள்ளார். “நாங்கள் ஜெனீவா சவாலை அச்சமின்றி எதிர்கொள்வோம். நாம் ஒருபோதும் அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம். நாங்கள் ஒரு சுதந்திர தேசம். நாங்கள் இந்தியப் பெருங்கடலில் பெரிய வல்லரசு நாடுகளின் போட்டிக்குப் பலியாக மாட்டோம்” எனக் காட்டமாகப் பேசியிருக்கிறார்.

சென்ற மாதம் (மார்ச் 27) சனிக்கிழமையன்று தெற்கு மாத்தறை மாவட்டத்தில் கிராம மக்களை சந்தித்துப் பேசுகின்ற கலந்துரையாடலில் சனாதிபதி கோட்டாபய உரைத்தது ஐநாமஉ பேரவையில் இந்தியாவின் தலையீட்டிற்குப் பதிலளிப்பதாக அமைந்திருந்தது.

“சிறிலங்கா அரசு இந்திய பெருங்கடலில் உலக நாடுகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டியில் எங்களது அரசு தன்னைத் தொடர்புபடுத்த விரும்பவில்லை. சிறிலங்காவில் மற்ற நாடுகள் தங்கள் புவிசார் அரசியல் தேவைகளை “அதிகாரப் பகிர்வு என்ற போர்வையின் கீழ் பிரிவினை வாதம் அறிமுகப்படுத்துவதை அனுமதிக்க முடியாது. எது எப்படியிருப்பினும் இலங்கையின் இறையாண்மை காட்டிக் கொடுக்கப்பட மாட்டாது” எனப் பேசியுள்ளார். இந்தச் செய்தியை அரசு சார்பான ஏரிக்கரை வெளியீடான டெய்லி நியூசின் முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தது.

சிறிலங்காவின் பெரும்பான்மை சிங்கள - பவுத்த வாக்காளர்களின் வாக்குகளால் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி கோட்டாபய இராசபக்ச தொடக்க முதவே அதிகாரப் பகிர்வுக்கு எதிராகப் பேசிவருகிறார்.

நொவெம்பர் 2019 இல் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் பேசிய கோட்டாபய அதிகாரப் பகிர்வை விட நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தப் போவதாகத் தெரிவித்தார். புது தில்லிக்கு மேற்கொண்ட தனது முதல் பயணத்தின்போது நொவெம்பர் 30, 2019 அன்று இந்து ஏட்டுக்கு அளித்த நேர்காணலில் இதே கருத்தை தெரிவித்திருந்தார்.

1987 இல் அரசியலமைப்பிற்கு 13 ஆவது திருத்தத்தின் கீழ் செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வு பெரும்பான்மை ஐசிங்களம்ஸ சமூகத்தின் விருப்பத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

“நல்லாட்சி அரசின் கொள்கையில் பயணித்து ஜெனிவா நெருக்கடிகளைச் சமாளிக்க நாம் ஆட்சிக்கு வரவில்லை. எமக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், இராணுவக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து சர்வதேச நாடுகள் எம்மைத் துரத்தினாலும் அவர்களின் பொ-றியில் நாம் சிக்கிக் கொள்ள மாட்டோம்” என அமைச்சர் விமல் வீரவன்ச சபதம் செய்கிறார்.

வீடு கொளுத்துகிற இராசாவுக்கு கொள்ளிக் கட்டை கொடுக்கும் அமைச்சரைப் போல இப்போது சிறிலங்கா அரசுக்கு ஆதரவாக இருக்கும் பவுத்த தேரர்கள் பலர் இப்போது மாகாண சபைகளுக்கு தேர்தலே நடத்தக் கூடாது எனப் போர்க் கொடி தூ க்கியுள்ளார்கள்.

மாகாண சபைத் தேர்தலைக் கைவிடாது விடின் மகாசங்கத்தினரை ஒன்றிணைத்து போரா-டுவோம் எனப் போர் முழக்கம் செய்துள்ளார்கள்.

மாகாண சபை முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். இல்லாவிடின் மகா சங்கத்தினரை ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுப்படுவோம் என ஓமல்பே சோபித தேரர் முழங்கியுள்ளார்.

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை (மார்ச் 29, 2021) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் பேசுகையில் -

“மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு நாட்டு மக்கள் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. மாறாக அரசியல்வாதிகளே மாகாண சபை முறைமை ஊடாக இலாபம் பெற்றுக்கொள்ளப் போராடுகிறார்கள். தேர்தல் காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முயற்சிக்கிறது. மாகாண சபைத் தேர்தல் இலங்கைக்குப் பொருத்தமற்றதாக உள்ளது. மா-காண சபை முறைமை ஊடாக எவ்வித பயனும் ஏற்படவில்லை. மாறாக மிதமிஞ்சிய செலவுகள் மாத்திரமே ஏற்பட்டுள்ளன.

தேர்தல் முறைமை காரணமாக மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. மாகாண சபை நிர்வாகம் சனதிபதி நியமித்த ஆளுநர்களால் முன்னெடுக்கப்படுகிறது. இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

மாகாண சபை முறைமையை முழுமையாக இரத்து



செய்து உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துமாறு அரசாங்
கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அரசியல்வாதிகளின் சுயநலத் தேவைக்காக மாகாண சபை முறைமை நிர்வகிக்
கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும். இல்லாவிடின் மகா சங்கத்தினரை ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. பொருளாதார அடிப்படையில் மக்கள்
பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக அரசாங்கம்
கவனம் செலுத்த வேண்டும் அதனை விடுத்து மாகாண சபைத் தேர்தலை நடத்த முயற்சிப்பது பயனற்றது” என்றார்.

இன்று நாட்டை ஆள்பவர்கள் பவுத்த தேரர்களது ஆலோசனையின் படியே நாட்டை ஆள்கிறார்கள். முக்கிய பவுத்த தேரர்கள் கொண்ட ஆலோசனை சபை கடந்த மகிந்த இராசபக்ச ஆட்சிக் காலத்தில் (2014) உருவாக்கப்பட்டது.

தொல்பொருள் செயலணியில் இடம்பெற்ற 15 உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் பவுத்த தேரர்களாவர். அதன் தலைவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒய்வுபெற்ற இராணுவ தளபதி கமால் குணரத்தின.

சிறிலங்காவில் மற்ற நாடுகள் தங்கள் புவி-சார் அரசியல் தேவைகளை ”அதிகாரப் பகிர்வு என்ற போர்வையின் கீழ் பிரிவினை வாதத்தை கொண்டு வர இடமளியோம்” என சனாதிபதி கோட்டாபய வீரம் பேசுகிறார். இந்தப் பின்னணியில் இந்திய அரசு என்ன செய்யப் போகிறது? ஐநாமஉ பேரவையில் இலங்கைக்கு எதிராக 46-1 இலக்கத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த நாடுகள் என்ன செய்யப் போகின்றன?

இலங்கைத் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, சுயமரியாதை மற்றும் அமைதிக்கு எங்கள் ஆதரவு. மற்றது இலங்கையின் ஒற்றுமை, உறுதிப்பாடு மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டை உறுதி செய்தல்.

ஆனால் சிறிலங்கா அரசு கேட்பதாக இல்லை. கேட்கவும் மாட்டோம் எனச் சண்டித்தனம் செய்கிறது. இப்போது நிறைவேற்றப்பட்ட ஐநாமஉ பேரவையின் தீர்மானத்தில் பொருளாதாரத் தடை, பயணத் தடை பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

ஐரோப்பிய ஒன்றியம் சிறிலங்காவிற்கு ஆண்டொன்றுக்கு அ.டொலர் 700 மில்லியன் ஜிஎஸ்பி வரிச் சலுகையை மீளப் பெற்றால் என்ன? சவேந்திர சில்வா மீது அமெரிக்கா விதித்துள்ள பயணத்தடை போல ஏனைய போர்க்கால இராணுவ தளபதிகள் மீதும் பயணத்தடையை போட்டால் என்ன? ஐக்கிய நாடுகள் சமாதானப் படையில் சிறிலங்கா இராணுவம் சேர்த்துக் கொள்ளப்படுவதை தவிர்தால் என்ன?

மயிலே, மயிலே இறகு போடென்றால் அது போடாது. அதைப் பிடித்து இறகைப் பிடுங்கினால்தான் அது சாத்தியமாகும்!

# இவ்வார ராசிபலன்

**02-04-2021 வெள்ளி தொடக்கம் 08-04-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** கனத்த இதயத்தில் வலுத்த பலன் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். சோதனைகள் நீங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல் நலம் திருப்தி தரும். மன அமைதி குறையும். திருமண வாய்ப்பு கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,7,9,0
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,U




**ரிஷபம்:** இறைவனின் கருணை இல்லத்தில் நிரம்பக் கூடிய அற்புதமான வாரம். சுய வீடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹேரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். தொழில் லாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். வெகுமதி கூடும் நாள். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை அணிகலன் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பெண்களுக்கு கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5,2,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,G




**சிம்மம்:** புதிய பாதையில் அடியெடுத்துவைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D





**கன்னி:** சினமும், குணமும் சீராக அமையக்கூடிய சிறப்பான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவிசெல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**துலாம்:** தடைகளுக்கு விடை கிடைக்கக் கூடிய நல்ல வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**விருச்சிகம்:** பெருமையான நிகழ்வுகளை அருமையாகச் சந்திக்கக்கூடிய அற்புதமான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய சிந்தனை உருவாகும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர்.
வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமாரி சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,2,7,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




**தனுசு:** நுண்ணறிவைப் பயன்படுத்தி மென்மேலும் உயரக்கூடிய உன்னதமான வாரம். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும் நாள். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபக்காரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும்.
வழிபடவேண்டியதெய்வம்: படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிக்கக்கூடிய அற்புதமான வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமைசேரக்கூடிய அருமையான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஓம்கார சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** வேண்டாத நபர்களை விலக்கி வைக்கவேண்டிய விவேகமான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மசக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

----------------------------------------

## வீணாவின் கவிக்கணை

குடும்பத்தைக் காத்திடவே நீ
கடல் கடந்து சென்றுவிட்டாய்,
விடியாத இரவுகளும்,
முடியாத கனவுகளுமாய் நீ
என்றென்றும் என் கண்ணில்
விழிநீராய்த் தவழ்கின்றாய்.
சரியான உணவின்றி உறக்கமின்றி
உழைக்கின்றாய் நீ அங்கே,
உன் பிரிவால் வாடுகின்றேன்
நான் இங்கே,
இறுக்கி அணைத்து முத்தமிட்டு
ஒட்டிக்கொண்டே இருப்பது
மட்டுமல்ல காதல், நீ
தொலைதூரத்தில் இருந்தாலும்
எனக்காவே வாழ்கின்றாய்
என்பதில் தான் உள்ளது காதல்.

# சாதனைத் தமிழன்
# அருட்பணி கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் மறைந்தார்

**"கலை என்பது மென்மையானது, பன்மையானது, ஒண்மையானது, உண்மையானது, திண்மையானது, வண்மையானது, வாய்மையானது, தூய்மையானது- ஆகவே தெய்வீகமானது" என்று கூறிய அருட்பணி கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் தனது வாழ்வைக் கலைக்காகவே அர்ப்பணித்து அதனைத் தெய்வீக வாழ்வாக்கி நேற்று 01. 04. 2021 அன்று இறையடி சேர்ந்துள்ளார்.**

................................................................



அருட்தந்தை கலாநிதி நீக்கிலாபிள்ளை மரிய சவேரி (மரிய சேவியர்) அடிகளார் 03.12.1939 இல் யாழ்ப்பாணம் இளவாலையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். 12 வயதில் சிறிய குருமடத்தில் சேர்க்கப்பட்ட இவர் பாடசாலையில் கற்கும் காலத்தில் அதீத திறமையால் இரட்டை வகுப்பேற்றங்களை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டார்.

கண்டி அம்பிற்றிய தேசிய செமினறியில் இறையியல் கல்வியைப் பெற்றுத் தொடர்ந்து ரோமாபுரியில் இறையியல் கல்வியைப் பெற்றார். தனது 22 ஆவது வயதில் 1962 இல் ரோமில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். உலகில் மிகக் குறைந்த வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் வரிசையில் இவர் மூத்தவராகக் கணிக்கப்படுகின்றார். இளவயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவதற்கு அன்றைய காலத்தில் இவருக்கு புனித பாப்பரசர் விசேட அனுமதியை வழங்கியிருந்தாராம்.

1962 இன் பிற்பகுதியில் சில காலங்கள் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பணியாற்றினார். ஆயினும் இவரது ஆர்வம் கலைத்துறைமீதே அதிகளவாக இருந்தது. இதனால் பாவசங்கீர்த்தன இரகசியம் என்ற இத்தாலியத் திரைப்படத்தைத் தமிழில் மொழிமாற்றம் செய்யும் பொறுப்பை ஏற்று அதனைச் சிறப்பாக செயற்படுத்தினார். இந்தியாவில் கற்கும் போது திராவிடர் கழக உரைகளாலும் நாடகம் சார்ந்த செல்வாக்குகளாலும் கவரப்பெற்ற அருட்தந்தை அவர்களின் தனது இளமைக்காலத்தில் எதுகை மோனையுடன் கூடிய அடுக்குவசன நடையில் தானும் உரையாற்றி மக்கள் மனங்களை வென்றார்.

தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் உதவிக் குருவாகப் பொறுப்பேற்று நாடகம் சார்ந்த முயற்சிகளில் ஈடுபட்டார். மதங்கடந்து இளைஞர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு பாஸ் என்று அழைக்கப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சிகளை தமிழில் புதிதாக எழுதி அரங்கேற்றினார். திருப்பாடுகளின் காட்சியை முதன்முதலாகத் தமிழில் நாடக வடிவில் ஆக்கியவர் அடிகளாரே ஆவார்.

1966 இல் உரும்பிராய் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார். பின் குருநகரிலும் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். 1966 இல் உரும்பிராயில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வேளை சமூக சமய நல்லிணக்கத்திற்கான ஊடகமாகக் கலையைக் கையாளலாம் என்று முயன்றார். இதற்காக நாடக வடிவத்தைக் கையில் எடுத்தார். அதில் வெற்றியும் கண்டார். அருட்தந்தையர்கள் நாடக வடிவத்தைக் கையாளக் கூடாது என்ற பாரம்பரிய நம்பிக்கையைத் தகர்த்து நாடக வடிவின் ஊடாக இறைநம்பிக்கையை ஊட்டும் கலைப்பயணத்தை மேற்கொண்டார்.

................................................................

வெவ்வேறு கலைப்பயணங்கள் வெவ்வேறு கல்விக் களங்கள் என்பவற்றின் வாயிலாக ஜேர்மன், ஆங்கிலம், சிங்களம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் முதலிய மொழிகளில் ஆளுமை பெற்றார். இவரளவுக்கு நாடகத்தைப் பார்வையிட்ட ஓர் இரசிகர் இலங்கையில் இருப்பாரா? என்பது சந்தேகமே. அந்த அளவிற்கு நாடகம் இவரை ஆட்கொண்டிருந்தது. இத்தனைக்கும் நாடகம் சார்ந்த பட்டப்படிப்பு எதனையும் மேற்கொள்ளாத அடிகளார் நாடகத்துறை மேதையாகத் திகழ்வது அவரது அதீத ஆர்வத்தின் வெளிப்பாடே ஆகும்.

................................................................

கலைத்தூது என்ற நிலையில் கலைப்பயணம் மேற்கொள்ளும் நோக்குடன் 1965 இல் உரும்பிராயில் உதயமானதே திருமறைக் கலாமன்றம். இன்று இலங்கையில் 20 கிளைகளைப் பரப்பி கலைத்தூது மேற்கொள்ளும் மிகப்பெரும் நிறுவனமாகத் திகழ்கின்றது. திருமறைக் கலாமன்றத்தின் ஊடாக இதுவரை 88 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கலைமுகம் என்ற காலாண்டு சஞ்சிகை (இதுவரை 64 இதழ்கள்) அடிகளாரைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்படுகின்றது. இதைவிட ஆற்றுகை என்ற நாடகமும் அரங்கியலுக்கான சஞ்சிகை, Journal of Saiva Sidhanta Studies (14 இதழ்கள்) என்ற ஆங்கில சஞ்சிகை என்பன அடிகளாரின் பங்கேற்புடன் வெளியிடப்பட்டன.

திருமறைக்கலாமன்றத்தின் கிளைகள் கனடா, பிரான்ஸ், சுவிஸ்லாந்து லண்டன் நோர்வே முதலிய நாடுகளிலும் பரந்துள்ளன. கலைத்தூது அழகியற் கல்லூரி, கலாமுற்றம் என்ற ஓவியக் கலைக்கூடம் என்பன நிறுவப்பட்டிருக்கின்றன. நம்மண்ணில் அடையாளப்படுத்தப்படக் கூடிய கலைத்துவமுள்ள கலைஞர்கள் பலர் அடிகளாரால் உருவாக்கப்பட்டு இன்று உலகெங்கும் பிரகாசிக்கின்றனர். தமிழ்நாடு பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து பட்டப்படிப்பை வழங்கும் நிறுவனமாகவும் மன்றம் திகழ்கின்றது. திருமறைக்கலாமன்றம் இன்றுவரை 18 நடன அரங்கேற்றங்களையும் 03 மிருதங்க அரங்கேற்றங்களையும் மேற்கொள்வதற்கு அன்று அடிகளார் இட்ட அடித்தளமே காரணமாகும்.

அடிகளாரின் கலைத்தளம்

................................................................

1971 இல் யாழ்ப்பாணம் கோட்டையைத் தளமாகக் கொண்டு முன்னூறு கலைஞர்களின் பங்கேற்புடன் அன்பில் மலர்ந்த அமர காவியம் என்ற நாடகத்தை அடிகளார் மேடையேற்றினார். 1972 இல் இங்கிருந்து 22 பேரடங்கிய நாடகக் குழுவை தமிழ்நாட்டின் திருச்சி நகருக்கு விமானத்தில் அழைத்துச் சென்று நாடகம் ஒன்றை மேடையேற்றினார். 2003 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் சர்வதேச சிறுவர் மாநாடு இடம்பெற்ற போது யுத்தத்தின் தொட்டில் (In the credle of War) என்ற பெயரில் ஊம நாடகம் (Wordless play) ஒன்றை மேடையேற்றி மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றார். எங்கள் மண்ணில் வார்த்தைகள் அற்ற நாடக வடிவத்தின் ஆரம்ப கர்த்தாவாக அடிகளாரையே கொள்வர். இதைவிட திருப்பாடுகளின் காட்சிகளுக்கு இடையே தமிழ்ச் சிற்றிலக்கிய வடிவங்களைப் புகுத்தியும் இக்கால செய்திகளைக் குறியீடாக்கியும் நாடகம் வரையும் நுட்பத்தையும் வெற்றிகரமாகக் கையாண்டார். சிலுவை உலா, கல்வாரிப்பரணி, கல்வாரிக் கலம்பகம் முதலிய சிற்றிலக்கிய வடிவங்களை நாடகங்களில் கையாண்டார்.

1971 இல் முதன் முதலாக பல சவால்களுக்கு மத்தியில் அருளும் இருளும் என்ற பெயரில் நாட்டிய நாடகத்தை மேடையேற்றினார்.

தமிழர் பண்டிகையாகத் தைப்பொங்கலைக் கொண்டாடும் வழக்கத்தை 1960களில் அடிகளார் மேற்கொண்டார். இன்று இது சமயம் கடந்த நிலையில் பேணப்படும் பண்டிகையாகக் காணப்படுகின்றமைக்கு அடிகளார் இட்ட அடித்தளமே காரணமாகும்.

ஜேர்மன், ஆங்கிலம் முதலிய மொழிகளில் பெற்ற புலமையாலும் அந்த நாடகங்களை பார்த்த பட்டறிவினாலும் தமிழுக்குப் புதிய அரங்க வடிவங்களை அறிமுகம் செய்தார்.

நிறைவாக...

வரலாற்றுத் துறையிலும் (லண்டன்) சைவசித்தாந்தத் துறையிலும் ஜேர்மனி) கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். இதைவிட 2010 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளிபரப்பாகும் டான் தொலைக்காட்சி 2019 ஆம் ஆண்டு அடிகளாருக்கு சாதனைத் தமிழன் விருதை வழங்கிக் கௌரவித்தது. இதைவிடப் பல சமூக மற்றும் சமய அமைப்புகள் அடிகளாருக்கு விருதுகளையும் கௌரவங்களையும் வழங்கியுள்ளன. கொழும்புத்துறை பெரிய குருமடத்தில் சைவசித்தாந்த மெய்யியலுக்கான பேராசிரியராகவும் செயற்பட்டார். சைவ சித்தாந்தத்தை தமிழர் சித்தாந்தமாகக் கொண்டு ஆராய்ச்சித் தளத்தில் முன்னெடுக்கும் அறிஞராக உலகோர் அடிகளாரை அடையாளப்படுத்துவர்.

சிங்களக் கலைஞர்களையும் தமிழ்க்கலைஞர்களையும் சேர்த்து சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் நாடக வடிவத்தைக் கையாண்டு இவர் மேற்கொண்ட முயற்சிகள் சமாதான விரும்பிகளிடையே மிகப்பெரும் செயற்பாடாக நோக்கப்படுகின்றது. இதனைக் கௌரவிக்கும் முகமாக 2016 ஆம் ஆண்டில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான மீயுயர் விருது ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

வாழ்வில் சாதனைப் பயணத்தை மேற்கொண்ட அடிகளாரின் வாழ்வியல் நம் எல்லோருக்கும் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கதாகும்.

**- செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**
**(தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)**

கனடாவில் தமிழ்ச் சமூகத்துக்கான
சிறப்பு தடுப்பூசி முகாம்

Tamil Community Pop-up Vaccine Clinic in Canada

கனடாவின் ஸ்காபுறோ நகரில் தமிழ் மக்களின் நலன் கருதி ஒரு விசேட தடுப்பூசி முகாம் தமிழ் பேசும் வைத்திய அதிகாரிகளினால் நடத்தப்பெறுகின்றது.. இதில் பங்கு கொண்டு பலன் பெறுங்கள்.

ஸ்காபறோ கோவிட்-19
தடுப்பூசி முகாம்

தமிழ்ச் சமூகத்துக்கான
சிறப்புத் தடுப்பூசி முகாம்

உங்கள் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற:
ஏப்ரல் 7, புதன்கிழமை
பிற்பகல் 3 மணி முதல் 9 மணி வரை
ஸ்காபறோ கொன்வென்ஷன் சென்டர்
(20 Torham Place)

ஸ்காபறோ சுகாதார வலையமைப்பாலும், உள்ளூர் சமூகப் பங்காளிகளாலும் ஒழுங்கமைக்கப்பட்டது
சிறப்புத் தடுப்பூசி முகாம் மருத்துவர்கள்:
Dr. எலன் அம்பலவாணர் | Dr. அருணா லம்போதரன் | Dr. ராஜேஸ்வரி லோகநாதன் | Dr. பொன் சிவாஜி
Dr. மயூரேந்திரா ரவிச்சந்திரன் | Dr. மணிவண்ணன் செல்வநாதன் | Dr. ஷிவானி ஸ்ரீதரன் | Dr. கண்ணா வேலா

தடுப்பூசி பெறத் தகுதியானோர் *
ஸ்காபறோவில் வசிக்கும் 70 வயதிற்கு மேற்பட்டோர்
ஸ்காபறோவில் வசிக்கும் நாட்பட்ட நோயுள்ள 50 வயதிற்கு மேற்பட்டோர் (அல்லது ஸ்காபறோவைச் சேர்ந்த ஆரம்ப மருத்துவர் அல்லது சிறப்பு மருத்துவ நிபுணரைக் கொண்டவர்கள்)
ஸ்காபறோவைச் சேர்ந்த மதத் தலைவர்கள்

முழுமையான தகுதிப் பட்டியலுக்கும், விபரங்களுக்கும
* www.ScarbVaccine.ca யைப் பார்வையிடவும்

சிறப்புத் தடுப்பூசி முகாமில் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களே உள்ளன!
உங்கள் முன்பதிவைச் செய்யுங்கள்
www.bit.ly/3dqnryq

எமது சிறப்புத் தடுப்பூசி முகாமுக்கு வரமுடியவில்லையா? ஸ்காபறோ கோவிட்-19 தடுப்பூசி நிலையங்களில் நீங்கள் முன்பதிவைச் செய்துகொள்ளலாம். www.ScarbVaccine.ca யைப் பார்வையிடுங்கள்.



# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly

## Brampton

## பெரிய வெள்ளி – உயிர்த்தெழுந்த ஞாயிறு

## GOOD FRIDAY & EASTER

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.– **வெளிப்படுத்தின விசேஷம் 1: 18**

**அன்பான வாசகப் பெருமக்களே!**

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை (இயேசுவை) உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். – **யோவான் 3: 16**

பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவரான இயேசு, இவ்வுலகிற்கு மானிடனாய் மனுவுருவெடுத்து வந்து, சகல மனுக்குலத்தின் பாவங்களுக்காக ஒரே பலியாக கல்வாரிச் சிலுவயிலே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். மரித்த இயேசு மூன்றாம் நாம் உயிர்த்தெழுந்து மனித சமுதாயத்திற்கு, இலவசானதும், இலகுவானதுமான இரட்சிப்பை பெறும் வழியை ஏற்படுத்தினார்.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து (இயேசு) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.– **ரோமர் 5: 8–10**

**அன்பானவர்களே!!**

இயேசுவின் பிறப்பு, உலக சரித்திரத்தையே இரண்டாகப் பிரித்து **"கிறிஸ்துவிற்கு முன் – கிறிஸ்துவிற்குப் பின்"** என்று முழு உலகமே வருடங்களை கணக்கிடுவதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறுதலிக்கவோ, புறக்கணிக்கவோ, எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் உபயோகத்தில் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இது தேவனால் உண்டானதென்பதும், இயேசுதாமே இவ்வுலகிற்கு மனுவுருவெடுத்து வந்த தெய்வம் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**மேலும் அன்பானவர்களே!!**

எங்கள் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காக பரலோகதிதிலருந்து இறங்கி மனுஷனாக அவதரித்து தன் இரத்தம் முழுவதையும் விரயமாகக் கொடுத்து, பலியாகி மரித்து, தெய்வீக வல்லமையோடு மூன்றாம்நாள் உயிரோடு எழுந்த அந்த ஒரே பரிசுத்த தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு பாவம் நீங்கி, சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ உங்கள் ஒவ்வொருவருக்காகவும் இறை ஆசி வேண்டி நிற்கிறோம். இயேசு மட்டுமே எமது பாவங்களை மன்னிக்க அதிகாரம் உள்ளவர். இயேசு நல்லவர். இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார்.

கர்த்தர் (கடவுள்) உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார், என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று, அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக்கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார், அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.– **சங்கீதம் 103: 8–19**

**"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."– பிலிப்பியா 4: 8**

**நாங்களும் சகல மக்களுக்காகவும் ஜெபிக்கிறோம், ஜெப தேவை இருப்பின் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.**

**இயேசுவின் உயிர்தெழுந்த நன்நாள் வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.**

**பாஸ்டர் அல்பிரட் செருபிம்**
**மீட்பர் கிறிஸ்து சபை**
**Redeemer Christ Assembly**
**Brampton**
**647 – 271 7645**

# மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயரின் இறுதி நல்லடக்க நாளான திங்கட்கிழமையை துக்க நாளாக அறிவிக்க வேண்டும்

## - செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை -

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவவர்களின் இறுதி அடக்க நாளான எதிர் வரும் திங்கட்கிழமையை அரசு துக்க நாளாக அறிவிக்க வேண்டும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமரிடம் அவசர கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இவ்விடையம் தொடர்பாக அவர் வியாழக்கிழமை (1) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அவர்களின் மறைவு தமிழினத்திற்கு பேரிழப்பாகும். இதற்காக தமிழர்கள் அனைவரும் எதிர் வரும் மூன்று நாட்களுக்கு துக்க தினம் அனுஸ்டிக்க வேண்டும்.

யுத்த காலத்தில் இன, மத, மொழி பேதம் பாராமல் மனிதம் மட்டுமே மேன்மை என கருதி அனைத்து மக்களுக்குமான சேவைகளை வழங்கியவர் மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை.

ஆண்டகை அவர்கள் சுகயீனம் காரணமாக வியாழக்கிழமை (1) அதிகாலையில் இயற்கை எய்தினார். அவரது இழப்பானது எமது தமிழ் சமூகத்திற்கு பேரிழப்பாக அமைந்துள்ளது.

ஆயர் அவர்கள் அனைத்து மதங்களையும் ஒரே மாதிரியாகவே பார்த்து வந்துள்ளார். இதனால் மதத்தலைவர்கள் பிற மதத்தவர்களின் அன்பை அதிகமாக பெற்றவர் இராயப்பு ஜோசப் ஆண்டகை என்றால் அது மிகையாகாது.

யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்காக அயராது பாடுபட்டவர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் அரசியல் கைதிகளுக்கும் ஓடி ஓடி உழைத்தவர்.

தமிழ் மக்கள் அனைவரும் நிம்மதியாகவும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டுமென்பதில் உறுதியான பற்றோடு இருந்தவர்.

இன்று அவர் எம்மை விட்டு பிரிந்து உள்ளார். ஆகவே எமது ஆயரின் ஆன்மா சாந்தி அடைவதற்காக அனைத்து மக்களின் வீடுகளிலும் கருப்புக் கொடிகளை பறக்கவிட்டு மூன்று நாட்கள் துக்க தினமாக அனுஸ்டிக்க வேண்டும்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கு இன்று வியாழக்கிழமை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.



மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அவர்களின் இறுதி நல்லடக்க நாளான திங்கட்கிழமையை (5) ஒரு துக்க நாளாக அறிவிக்கும் படி கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளேன்.

பிரதமர் அவர்கள் ஆயர் அவர்களை நன்கு அறிந்தவர். அந்த வகையில் எதிர் வரும் திங்கட்கிழமையை துக்க நாளாக அறிவிக்க வேண்டும்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன் பௌத்த மத தலைவர் ஒருவர் மரணித்த போது அவரது இறுதி அடக்க நாளை துக்க நாளாக அரசு அறிவித்து இருந்தது.

அதே போன்று மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை அவர்களின் இறுதி அடக்க நாளான திங்கட்கிழமையை துக்க நாளாக அரசு அறிவிக்க வேண்டும்.குறித்த கோரிக்கையை பிரதமரிடம் முன் வைத்துள்ளேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (01-04-2021)**

## கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலா மையமான அறுகம்பையில் அமைந்துள்ள உல்லாசப் பயண விடுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது





இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வெளிநாட்டவர்களுக்கு நன்கு பிடித்தமான சுற்றுலா மையம் என்று அறியப்பெற்ற அறுகம்பையில் அமைந்துள்ள உல்லாசப் பயண விடுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது. பொத்துவிலுக்கு அண்மையில் கடற்கரை மற்றும் வெளிநாட்டவர் விரும்பும் இயற்கை வளம் ஆகியவை நிறைந்த அறுகம்பையில் நல்லதோர் முதலீடு.

40 பேர்ச் காணியில் 8 பெரிய அறை-கள் கொண்ட இந்த உல்லாசப் பயணவி-டுதியில் விசாலமான உணவகமும் உள்ளது. வெளிநாட்டவர்களைக் கவர்ந்த இந்த விடுதியின் விலை இலங்கைப் பணத்தில் 38 மில்லியன் ரூபாய்கள். வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் விரும்பினால், பங்குதாரராகவும் இணைந்து கொள்ளலாம். எதையும் பேசித் தீர்ப்பதற்கு உரிமையாளர் விரும்புகின்றார்.

ஆர்வமுள்ளவர்கள் இலங்கை வற்ஸ் அப் இலக்கம் 94777374433 அல்லது கனடா இலக்கம் (416) 587-0552 ஆகிய இலக்கங்களை அழைக்கலாம்.






Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#39

நாடகம் நடிப்பு இவற்றையே தனது இரு விழிகளாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்தவர், வளர்ந்தவர் நடிகர் திலகம் என்பது அவருடைய வரலாற்றில் நிலையான பக்கங்களாகும். நாடகம் தாய் சினிமா சேய் என்று கூறுவார்கள். தற்காலத்தில் முன்புபோல் நாடகக்கலை பேணிப் பாதுகாக்கப்படுதலும் இல்லை. நாடகத்தால் வாழ்க்கை நடத்துவோரும் இல்லாமல் அருகி வருகிறது.



இதற்குப் பல காரணங்கள் கூறலாம். வளர்ந்து வரும் தொழில்நுட்ப வசதிகளும், வாழ்க்கையின் யதார்த்த நுகர்நிலை வசதிகளும், புதிய தலைமுறையினரின் ரசனையும், கலையுலக தொழில்முறை மாற்றங்களும் நாடகக் கலையை பல தூரம் பின்னுக்குத் தள்ளி விட்டது. அன்றைய நாடகங்களின் புதிய பரிணாம அறிவியல் வெளிப்பாடே தொலைக்காட்சியில் தொடரும் "சின்னத்திரை" அல்லது "குறுந் திரைப்பட" தொடர் காட்சிகளாகும். எனவே நாடகமேடை காட்சிகள் யாவும் சின்னத்திரை படங்களாக வடிவெடுத்துள்ளன. அப்படி சின்னத்திரையில் நடிப்பதனாலும் கூட நடிப்புப் பயிற்சி அவசியம் அல்லவா! ஆக, இப்போதும் சரி அடுத்த தலைமுறை காலத்திலும் சரி, நாடக அனுபவமும், நடிப்பு பயிற்சியும் ஒரு நடிப்புக் கலைஞனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை மனதில் கொண்டு நடிகர் திலகம் சொல்லிய அவரது விருப்பத்தை இங்கு வெளியிடுவது எதிர்கால கலைஞர்களுக்கும் நலிந்து வரும் நாடக, நடிப்புப் பட்டறைகளுக்கு ஒரு உந்துசக்தியாக, உற்றசாக மருந்தாகும் என நடிகர் திலகம் அவர்களின் நீண்ட கால விருப்பத்தை இங்கு குறிப்பிடுகிறேன்!

சிலர் சொல்ல விரும்புவதை அடுக்கடுக்காக வார்த்தைகளில் வர்ணித்து சொல்வார்கள். சிலர் அதை சுலபமாக முகபாவத்தில் காட்டி விடுவார்கள். இந்த இரண்டையும் திறம்பட செய்பவனே நல்ல நடிகன். வார்த்தைகளால் வர்ணிக்க மட்டும் தெரிந்துகொண்டு முகபாவம் காட்ட முடியாமல் திண்டாடினால் அதை நடிப்பென்று சொல்ல முடியாது. அதேபோல் முகபாவம் மட்டும் காட்ட தெரிந்து சரியாகப் பேசத் தெரியாவிட்டாலும் அவரை நல்ல பயிற்சி பெற்ற நடிகர் என்று ஒப்புக்கொள்ள முடியாது.





நல்ல முறையில் நடிகர்களை உருவாக்க வழி செய்ய விரும்புகிறவர்கள் நாடக உலகிலிருந்து பயிற்சி பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாடகம்தான் நடிப்பிற்கு நல்ல பயிற்சிக்கூடம். நாடகத்தின் மூலம் பல வேடங்களை தாங்கி அனுபவப்பட்டவர்கள் தான் திறமையாக நடிக்க முடியும். இம்மாதிரி நாடகங்களில் நடித்து பக்குவப்பட்ட பல நல்ல நடிகர்கள் நடிகைகள் நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள்.

இவர்களை திருவாளர்கள் ஏ வி மெய்யப்பச் செட்டியார், எஸ் எஸ் வாசன், ஸ்ரீராமுலு நாயுடு, நாராயண ஐயங்கார், நாகிரெட்டி, ஏ எல் சீனிவாசன் (இவர்கள் யாவரும் இப்போது உயிருடன் இல்லை. சிவாஜி வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்களாகும்) இன்னும் இவர்கள் போன்ற பெரும் படத் தயாரிப்பாளர்கள் அழைக்கவேண்டும்! அவர்களுடைய திறமையை சோதித்துக் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போது தான் பல புதுமுகங்கள் தமிழ் திரையுலகிற்கு வரமுடியும். நான் ஏன் பெரும் படத்தயாரிப்பாளர்களைக் குறிப்பிடுகிறேன் என்றால், அவர்கள் தான் யாருடைய உதவியையும் எதிர்பாராமல் படத்தை எடுத்து முடிக்க கூடியவர்கள். ஆகவே அவர்கள் தான் இதற்காவன செய்ய வேண்டும்!



இதை விட்டுவிட்டு பயிற்சிக்கூடம் ஆரம்பித்து அதன் மூலம் நடிகர்களை உண்டாக்க விரும்புவது, அவ்வளவு பயன்தராது. பயிற்சி பெறும்போது வெறும் பாடங்கள் படித்து விட்டால் மட்டும் நடிப்பு வந்துவிடாது. அதற்கு நல்ல அனுபவம் வேண்டும். கொஞ்சம் நாடக அனுபவமுடையவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மேலும் இம்மாதிரி பயிற்சி அளித்தால், அது வெற்றி பெறும் என்று நான் நம்பவில்லை. சொல்லிக் கொடுத்து நல்ல நடன, இசைக் கலைஞர்களை உண்டாக்கி விடலாம். ஆனால் நடிப்பு அப்படி அல்ல. உடம்பில் ஊறிக்கிடக்கிற உணர்ச்சிகளை எடுத்துக்காட்டும் உயர்ந்த கலை அது! ஆகவே ஆர்வமும், ஆசையும் சற்றே அனுபவமும் பெற்றவர்கள் தேவை.

"வெட்கம்.. வெட்கம்.." என்று கூறுகிறார்களே அது நடிகனுக்கு இருக்கக் கூடாது. எந்தவித பாத்திரத்தையும் வெட்கப்படாமல் ஏற்று நடிக்க வேண்டும். என் அனுபவத்தில் தெரிந்தவரை நாடக மேடை தான் புதுமுகங்களுக்கு ஏற்ற பயிற்சிக் கூடம்.!



வருங்காலத்தில் எனக்கு வாரிசாக விளங்கக்கூடிய இரண்டு கதாநாயகன்-கதாநாயகிகளை உருவாக்க நான் திட்டமிட்டுள்ளேன். நான் உருவாக்கும் 4 பேர்கள் சினிமா தொழிலில் இருக்க வேண்டும். அவர்கள் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்டு கொடுத்த பாத்திரத்தை உணர்ந்து உணர்ச்சிகரமாக நடிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நன்றாக நடிக்கத் தெரிந்தவர்கள் அழகாய் இருக்க வேண்டும்.. என்னால் உருவாக்கப்படும் வருங்கால நட்சத்திரங்கள் இம்மாதிரி எல்லாவிதத்திலும் சிறப்பாக விளங்க வேண்டும் என்பது என் ஆசை! நான் அவர்கள் யார் என்று இப்போது அறிவிக்கும் நிலையில் இல்லை. இன்னும் அவர்களை நான் தெரிந்திருக்கவில்லை. விரைவில் நல்ல நான்கு கலைஞர்களை தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்கப் போகிறேன்...!

பல ஆண்டுகளுக்கு முன் சிவாஜி ஐயா ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலிருந்து மேற்கூறிய தகவல்களை தந்துள்ளேன். பலருக்கு அவரது அபிலாசைகள் தெரியாமலே போய்விட்டது!

யார் யாரோ திடீர் திடீரென நடிக்க வருகிறார்கள்! வந்த வேகத்திலேயே காணாமல் போய்விடுகிறார்கள். காரணம் நல்ல பயிற்சியும், எடுத்துக் கொண்ட விடயத்தில் அர்ப்பணிப்பு - விடாமுயற்சி - கற்றுக் கொள்ளும் ஆற்றல் - கற்பனை வளம் இல்லாமையே காரணம் என நான் நம்புகிறேன்.

நாடகம் - நாடகப் பயிற்சி - நாடகப் பட்டறை என சில விடயங்களை எழுதியபடியால், நடிகர் திலகம் அவர்கள் பல திரைப்படங்களில் இணைக்கப்பட்ட ஓரங்க நாடகங்களில் நடித்து தனது நாடகப் புலமையை வெளிப்படுத்தியிருப்பார். இப்படியான நாடகக் காட்சி அவருக்கு அல்வா சாப்பிடுற மாதிரியாகும்!

"ராஜா ராணி" (1956) திரைப்படத்தில் இரு ஓரங்க நாடகங்கள் இணைக்கப்பட்டன. ஒன்று "சேரன் செங்குட்டுவன்" அடுத்தது "சாக்ரடீஸ்" நாடகம். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் கைவண்ணத்தில் உருவான நாடக சித்திரங்களாகும்!

நீங்கள் படித்து ரசிக்கவும், நடித்து பேசுவதற்கும் சாக்கரடீஸ் நாடகத்திலிருந்து சில காட்சிகளை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(கிரேக்கத்தின் வீதியிலே ஒருநாள்)

சாக்ரடீஸ் (சிவாஜி):
"ஏற்றமிகு ஏதென்ஸ் நகரத்து எழில் மிக்க வாலிபர்களே! நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ இதோ சாக்கிரட்டீஸ் அழைக்கிறேன்!"
ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்! வீரம் விலை போகாது! விவேகம் துணைக்கு வராவிட்டால் தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும் மாத்திரம் போதாது தீரர்களே! இதோ நான் தரும் அறிவாயுதம்! அறிவாயுதம்! அகிலத்தின் அணையாத ஜோதி!
(சாக்ரடீஸுக்கு விஷம் கொடுத்து மரண தண்டனை விதிக்கப்படுகிறது)
ஹனிட்டஸ்: ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்!
சாக்ரடீஸ்: ஏன் இப்படியும் சொல்லலாமே! இருண்ட வீட்டுக்கு ஒரு விளக்கு ஏன் மெலிட்டஸ் திகைக்கிறாய்?

சபையோர்களே! வாலிபர்கள் என்னை சுற்றி வானம்பாடிகளைப் போல் வட்டமடிக்க காரணம் என்னுடைய வார்த்தை அலங்காரங்கள் அல்ல.. வளங்குறையாத கருத்துக்கள்! கொள்கைகள். இந்த தரணிக்குத் தேவையான தங்க நிகர் எண்ணங்கள்! அழகு மொழியால் அலங்கார அடுக்குகளால் அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிறார்களே, அவர்களை கேட்கிறேன் அந்த மொழி எனக்கு மட்டும் சொந்தம் அல்லவே? அவர்கள் அதைப் பேசக்கூடாது என்று நான் தடை போட்டது கிடையாதே! (காங்கிரஸ் அரசுக்கு கலைஞர் மு க சாக்ரடீஸ் வாய்மொழியாக பதிலளிக்கிறார்!) பேசிப் பார்க்கட்டுமே... அவர்களும்..! பாவம் பேசித் தோற்றவர்கள்! உம்.. பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் கிரேக்க நாட்டு இளைஞர்களை கெடுத்து விட்டார் சாக்ரடீஸ் என்பது குற்றச்சாட்டு. சாக்ரடீஸ் விஷம் அருந்தி சாகவேண்டும் என்பது தீர்ப்பு!

(இதோ கிரேக்கப் பெரியார் சாக்ரடீஸின் இறுதி பேச்சு) "எனதருமை ஏதென்சு நகரத்துப் பெருமககளே, இதோ சாக்கிரட்டீஸ் சந்தோசமாக சாகப்போகிறார்.! கிரேக்க நாட்டு நீதிமன்றம் கூடைக் கணக்கில் அவன் மீது கொட்டி, கோப்பை நிறைய நஞ்சையும் கொடுத்து பருகடா இந்த உயிர் பருகும் பாயாசத்தை" என்று கட்டளையிட்டிருக்கிறது.

விஷ கிண்ணத்தின் விளிம்பிலே, உபதேசங்களை உதிர்த்த இந்த சாக்ரடீசின் உதடுகள் பதியப் போகின்றன! இன்னும் ஓரிரு வினாடிகள் - அதன்பிறகு சாக்ரடீஸ் என்று அழைக்கப்படும் இந்த உயிர் எல்லாமே அதனதன் தொடர்பை அறுத்துக்கொண்டு வாழ்க்கைத் தொடர் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

வருகிறேன்! கிரேக்கமே வருகிறேன்! எனதருமை ஏதென்ஸ் நகரமே வருகிறேன்! நான் ஆடி ஓடி ஆவேசமாக பேசுவதற்கு துணைபுரிந்த ஏதென்ஸ் நகரத்து எழில் நிறைந்த வீதிகளே.. வீதியோரத்து மர நிழல்களே... வீட்டோரத் திண்ணைகளே.. உங்கள் அனைவரிடமும் இருந்து இந்த கிழவன் விடைபெறுகிறான். பீடுநடையும், பெருமித நோக்கமும் கொண்ட இளைஞர்களே.. நாடு காக்கும் நல்ல தம்பிகளே... பேரன்பு கொண்டோரே! பெரியோரே! என்னைப் பெற்ற தாய்மார்களே! நல் இளம் சிங்கங்களே...! உங்கள் அனைவருக்கும் சாக்ரடீஸின் இறுதி வணக்கம் உரித்தாகுக!

இந்த கிழவன் கிரேக்க இளைஞர்களை கெடுத்ததாக யாராவது.. உண்மையாக நினைத்தால் அவர்கள் என்னை மன்னிக்கட்டும்! வருகிறேன் வணக்கம்!

ஓ ஜெகமே! சிந்திக்கத் தவறாதே! உன்னையே நீ எண்ணிப்பார்...! உன்னையே நீ எண்ணிப்பார்..!

அன்புள்ள தமிழர்களே... எங்கள் காலத்திய சிம்மக்குரலோன் (அவர் மட்டும்தான்) சிவாஜிகணேசனும்.. அவருக்கு உரைவீச்சு எழுதிய முத்தமிழ் காவலர் கலைஞர் மு கருணாநிதியும் இணைந்து திரைக்காவியங்கள் மூலம் தமிழுக்கு செய்த தொண்டு என்றென்றும் போற்றப் பட வேண்டியதாகும்!

நினைவுகளும்.. காட்சிகளும் விரியும்..!
வீணை மைந்தன்


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் கடம்பூர் பயணம்... *அத்தியாயம் 5*

இப்பொழுது என் ஆசையின் அத்திவாரமே ஆட்டம் காணப் போகிறதே. நான் எதைச் செய்வது? என் கடமைதான் என்ன? என்ற கேள்விகளோடு அவன் மனக் கலக்கம் கொண்டவனாக இருக்கும் போதே தூக்கம்கண்களைத் தழுவி அணைத்துவிட்டது. ஓருவாறாக தூக்கத்தில் ஆழ்ந்தான். மறு நாள் காலை சூரியக்கதிர்கள் தன் பொன்னொளியை பரப்பியது. வந்தியத்தேவனோ
தூங்கிக் கொண்டிருந்தான். அவன் நண்பன் கந்தமாறன் அவனை எழுப்பி 'நீ நன்றாகத் தூங்குகிறாய் எழுந்திரு' என்றான்.

அப்பொழுது வந்தியத்தேவனும் எழுந்து தன் மனதில் ஓடிக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் யாவற்றையும் அப்படியே நிறுத்தி விட்டு 'ஆம் ஆம் குரவைக் கூத்து கண்டு கழித்து விட்டு வந்து படுத்தது இப்பொழுது தான் நீ எழுப்புகிறாய் நல்லது நானும் உடனே கிளம்ப வேண்டும்' என்றான் வந்தியத்தேவன். அதற்கு கந்தமாறன், 'நண்பா நீண்ட நாட்களின் பின் நாங்கள் சந்தித்திருக்கிறோம் எப்படி நீ உடனே புறப்படப் போகிறேன்' என்கிறாய். குறைந்தது பத்து நாட்கள் தங்கிவிட்டுப் போ என்றான். அதற்கு வந்தியத்தேவன் 'எனக்கும் இங்கு தங்க ரொம்ப ஆசை ஆனால் நான் அவரசமாக தஞ்சாவூர் போக வேண்டும். என் மாமாவிற்கு உடல் நிலை மிக ஆபத்தாக உள்ளது உன் நட்பின் பெருமையால் போகும் வழிதானே என்று என் உயிர் நண்பனை பார்க்க வந்தேன் இப்பொழுது நான் புறப்பட்டு ஆக வேண்டும்' என்றான். அதற்கு கந்தமாறன் 'சரி காலை உணவை அருந்திவிட்டு இருவரும் புறப்படுவோம்' என்றான். வந்தியத்தேவன் 'உன் வீட்டிற்கு பெரிய விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு எப்படி என்னுடன் கொள்ளிட நதிவரை வருவாய்' என்றான். அதற்கு கந்தமாறன் நீ தான் 'எனக்குப் பெரிய விருந்தாளி இங்கு இருப்பவர்களை என் தந்தையும் அரண்மனை அதிகாரிகளும் கவனித்துக் கொள்வார்கள்' என்றான்.

பின்பு இரு நண்பர்களும் இரு குதிரை மேல் ஏறி கொள்ளிடம் நோக்கி புறப்பட்டனர். வழியெல்லாம் தாங்கள் வடபெண்ணை நதிக்கரையில் காவலில் இருந்த போது நடந்த யாவற்றையும் பேசி மகிழ்ந்தனர். 'கந்தமாறா நான் ஓர் இரவுதான் உன் வீட்டில் இருந்தேன் அது எனக்கு மிகவும் பயனுள்ளதாய் உள்ளது. ஆனால் உன் தங்கை மணிமேகலை பற்றி நீ எனக்கு நிறைய வர்ணனை செய்தாய் ஆனால் என்னால் அவளை முழுதாக பார்கவோ, பேசவா முடியவில்லை நான் பார்த்த போது அவள் தன் அன்னைக்குப் பின்னால் ஒழிந்து கொண்டிருந்தாள். அது தான் என் குறை' என்றான் வந்தித்தேவன். மேலும் உன் வீட்டிற்கு நான் மாப்பிள்ளையாக வரப் போகிறவன் எனறும் சொல்வாயே என்றான். அதற்கு கந்தமாறன், தடுமாற்றத்துடன் 'வந்தியத் தேவா நான் அன்று அப்படிச் சொன்னேன் இன்று என் பெற்றோர் அவளிற்கு வேறு மாப்பிளை பார்த்து விட்டார்கள் அவளும் சம்மதம் சொல்லிவிட்டாள் அதனால் அவளை நீ மறந்துவிடு' என்றான். அதற்கு வந்தியத்தேவன், மௌனமாக நேற்று இராத்திரி நான் கண்ட பணக்கார விருந்தாளிகள் யாரையாவது உங்கள் வீட்டு மாப்பிள்ளையாக்க திட்டம் தீட்டியிருப்பீர்கள் என்று தன்னுள் முணுமுணுத்தான். 'இது எனக்கு வியப்போ, ஏமாற்றமோ இல்லை. இது நான் எதிர்பார்த்த ஒன்றுதான் -------- வந்தியத்தேவா உன்னிடம் மனம் விட்டுப் பேச முடியவில்லை. என்னை மன்னித்துவிடு. விஷயம் வெளியாகி வரும் வேளை உன்னிடம் சொல்லுகிறேன். என்னை நம்பியிரு எங்கள் நட்பிற்கு எந்தப் பங்கமும் வராது' என்று கந்தமாறன் கூறுகையில் வந்தியத்தேவன் 'என் உறைவாளையும், வேலையும் தான் நம்பியிருக்கிறேன்' என்றான். இருவரும் உரையாடியபடி கொள்ளிடக் கரையை அடைந்தனர். கொள்ளிடக் கரையின் கொள்ளை அழகைக் கண்டு வந்தியத்தேவன் பிரமித்து நின்றான்.




அங்கு நின்ற படகில் வந்தியத்தேவன் ஏறிக் கொண்டான். அந்தப் படகில் சிவபக்தன் ஒருவர் இருந்தார். கந்தமாறன் தன் நண்பனைக் கட்டித் தழுவி விடைபெற்றுக் கொண்டான். படகு புறப்பட ஆயத்தமானது அப்பொழுது அந்த படகை நோக்கி ஒருவர் ஓடி வந்தார். வந்தியத்தேவன் அவரை அடையாளம் கண்டு கொண்டான். அவன் தான் ஆழ்வார்க்கடியான். நேற்று இரவு கடம்பூர் மாளிகையின் மதில் மேல் காணப்பட்டவன். அவனிடம் பல விடயங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினான். அப்பொழுது அந்த படகில் இருந்த சைவர் 'படகை விடு நான் இந்த வைஷ்ணவனுடன் பயணம் செய்ய விரும்பவில்லை' என்றான் அதற்கு வந்தியத்தேவன் 'பொறுங்கள் படகில் இடமிருக்கிறதே! அவரும் ஏறிக் கொள்ளட்டும்' என்றான். பின்னர் ஆழ்வார்க்கடியான், சைவர், வந்தியத்தேவன் கந்தமாறனின் ஆள் ஒருவனும் படகில் பயணித்தனர். இங்கும் சைவரும், வைஷ்ணவரும் பேச்சில் மோதிக்கொண்டு சண்டை செய்ய ஒருவர் மீது ஒருவர் பாய்ந்தனர்.

அப்பொழுது படகு ஆடியது வந்தியததேவனும் படகுக் காரரும் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். பழந்திழ் நாட்டில் பௌத்த மதமும் சமண மதமும் செலவாக்குப் பெற்றிருந்ததால் சிற்பம், சித்திரம், கவிதை, காவியம் முதலிய கலைகள் தழைத்தோங்கியது இதனால் பல ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி பல தமிழ் பாசுரங்களை மொழிந்தார்கள். வைஷ்ணவமும், சைவமும் தழைத்தோங்க சிற்பக் கலையும் இசைக்கலையும் துணை செய்தது. சமய பிரசார முறை மிக சக்திவாய்ந்ததாக இருந்தது. இதேவேளை கேரள நாட்டில் காலடி என்னும் இடத்தில் பிறந்த ஒரு மகான் முற்றும் துறந்த முனிவராய் வடமொழியில் உள்ள பல சாஸ்திரங்களையும் படித்து அத்வைத வேதாந்தக் கொள்கையில் கொடி நாட்டினார். பாரத தேசம் முழவதும் திக் விஜயம் செய்து, மடங்களை தாபித்து தனது கொள்கையை ஆதரித்த சந்நியாசிகளை நாடெங்கும் பரவச் செய்தார். இதனால் சமயக் கொந்தழிப்பு ஏறபடலாயிற்று. இதனால் வீர வைஷ்ணவர்களும், வீர சைவர்களும் சமய வாதப்போர் செய்தனர். அதன் பிரகாரம் அடிதடி சண்டையும் மூண்டது. இப்பொழுது தெரிகிறதா ஏன் இவர்கள் சண்டை செய்கிறார்கள் என்று. கொள்கைகள், தத்துவங்கள் யாவும் சிலருக்குப் பிடிக்கின்றன, சிலருக்குப் பிடிப்பதில்லை இதனால் சண்டைகள் பிளவுகள் பிரிவுகள் ஊற்றெடுத்து உயிர் கொல்லிகளாக பொங்கி நிற்கிறது. சமூகத்தில் உரிமைகள் உடமைகள் பறிக்கப்படும் போது போராட்டம் அவசியம் ஒன்றிணைந்து போராடுவது நன்று! இவ்வாறாக இவர்கள் பயணம் தர்க்கத்திலும், அதைத் தடுப்பதிலுமாக தொடர்ந்து, ஒருவாறாக படகு குடந்தையை அடைந்தது. மனித வாழ்க்கைப்பயணம் கூட தர்க்கத்தால் தடங்கலுடனேயே நகர்கிறதே! இதனால் மகிழ்ச்சிக்குரிய தருணங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.

*தொடரும்...*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 940



## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம்,
### ரம்பொட. மலையகம்

"அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் எம்மை ஆதரித்துக் காப்பான்."

உலகமக்களின் மேம்பாட்டிற்காக உலகமெங்குமுள்ள ஆலயங்கள், மகத்தான சேவை ஆற்றிவருகின்றன. மிருகங்களோடு மிருகமாக வாழ்ந்த மனிதனை நல்வழிப்படுத்தி, மனிதநேயத்தோடு வாழ வகைசெய்த பெருமை சமயங்களையே சாரும். இந்தவகையிலே சனாதன தர்மம் எனப் போற்றப்படுகின்ற இந்துசமயமும், மக்களின் மேம்பாட்டிற்காக ஆலயங்களின் மூலம் பெரும்பணியாற்றி வருகின்றது. அத்தோடு காலத்திற்குக் காலம் அவதார புரு'ர்களையும், ஞானிகளையும், ஆற்றல் மிகுந்தோரையும் உருவாக்கி, மக்கள் மக்களாக வாழ வழிகாட்டி வந்துள்ளது.

கோயில்கள் பல, இந்துமதத்தின் அடிப்படையாக விளங்குகின்ற வேதங்களுடன் நேரடித் தொடர்புடைய, ஆகமவிதிகளின் அடிப்படையிலேயே அமைக்கப்படுகின்றன. ஆலயங்களிலே அமைக்கப்படும் மூர்த்தங்கள், தூய்மையான உயர்சக்திவாய்ந்த அதிர்வுகளைக் கடத்திக்கொண்டிருக்கும் தன்மை வாய்ந்தவை. இத்தகைய அதிர்வுகள் உடல், உளத் தூய்மைக்கு உதவுவதோடு, சுற்றுப்புறச் சூழலையும் தூய்மையாக்க உதவுகின்றன. இக்காரணங்களினாலேயே. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது. இத்தகைய அறிவியல் காரணங்களைக் கருத்தில் கொண்ட நம்மவர், ஊரெங்கும் மட்டுமல்ல உலகெங்கும் சைவ ஆலயங்களை அமைத்து, மக்கள் உடலும், உள்ளமும் நலம்பெற உதவி வருகின்றனர்.

இவ்வாறான ஆலயங்களுக்கு சுத்தமாக, மனச்சுத்தியோடு செல்ல வேண்டும். ஆலயங்களுக்கு ஏன் சுத்தமாகச் செல்ல வேண்டும் என்பது சிந்தனைக்குரியது. ஆலயங்கள் அமைய வேண்டும் என்ற நியதிக்குரிய இடங்களில், என்றோ ஒரு காலத்தில் ஞானிகள், ரிஷிகள், முனிவர்கள் தியானம் செய்தோ, அன்றி அவர்கள் சமாதி அடைந்த இடமாகவோ அமைந்திருக்கும். இவ்வாறு வாழ்ந்த காலத்தில் இந்த ஞானிகள், நித்திய மந்திர உச்சாடனத்தை மேற்கொள்வது வழக்கம். இதன் மூலம் ஞானிகளது முழு உடம்பும், மந்திரசக்தி ஏற்றப்பட்டு, அனைத்து உயிர்களையும் தன்வசப்படுத்தக்கூடிய தன்மையைக் கொண்டு காணப்படும். இக்காரணத்தினால், இவர்களது அதிர்வுகள் அவர்கள் வாழ்ந்த இடத்திலே தொடர்ந்தும் நிலைத்திருக்கும். இவ்விடம் தூய்மையான சிந்தனையை ஏற்படுத்தவல்லதாகக் காணப்படுவதால், மக்கள் இவ்விடத்தை நாடுவதும், பின்னர் அவை ஆலயமாக மாறுவதுமே நியதியாகக் காணப்படுகின்றது. அருளும், அற்புதங்களும் நிகழும் ஆலயங்கள் பல இவ்வாறான நிலையைப் பெற்றிருப்பதை, அவற்றின் ஆரம்பகால வரலாறு எடுத்தியம்புகின்றது.

ஆலயங்களிலே நிறுவப்படும் மூர்த்தங்கள், பல்வேறு நிலையில் அமைக்கப்பட்டு தூய்மையான, உயர் சக்திவாய்ந்த அதிர்வுகளைக் கடத்திக் கொண்டிருக்கும், தெய்வீகப்பண்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன. இவ்வாறான அதிர்வுகள் (vibration) மனித மனங்களையும், சுற்றுப்புறச் சூழலையும் தூய்மைப்படுத்தும் தன்மையுடையவையாக விளங்குகின்றன. ஊனுடம்பு ஆலயம் என்று கருதப்படும் மனிதனிடமும், மிகக் குறைந்த அளவில் அதிர்வலைகள் காணப்படுகின்றது. இவ்வதிர்வலைகள், மனிதனது உடல், உளத் தன்மைகளினால் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறான குறைந்த அதிர்வினைக் கொண்ட மனிதன், ஆலயத்திற்குச் செல்லும்போது, கோயிலின் உயர் அதிர்வும், மனிதனது அதிர்வும் கலக்கும் நிலை காணப்படும். இதன் விளைவாக, மிக உயர்ந்த நிலையிலான அதிர்வலைகள் கோயிலுக்குச் செல்வோரைச் சூழ உருவாக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலை, மனிதனது மனநிலையைச் சமப்படுத்தித் தூய்மையாக்கி, உடல், உள துன்பங்களை நீக்க வகை செய்கின்றது. இக்காரணத்தினால், எவர் ஆலயங்களுக்குச் சென்றாலும் உடல், உள ரீதியாகப் பயன்பெறுவர். கோயிலுக்குச் செல்பவர்களின் அதிர்வுகள், ஆலயத்திலே காணப்படுகின்ற அதிர்வுகளைச் சிறிதளவு பாதிப்பதால், கோயிலுக்குச் செல்வோர், உடல், உளத் தூய்மையோடு செல்ல வேண்டும் என்பதை இந்து மதம் வலியுறுத்தியுள்ளது. இல்லாவிடின், கோயில்கள் பாதிக்கப்பட்டு, சமுதாயமும், நாடும் சீரழிந்து விடும். இக்காரணத்தினாலேயே உடல், உள சுத்தத்தை மக்களுக்குப் பல இலகுவான வழியிலே, வழிபாட்டு முறைகளுடன் இந்துமதம் இணைத்துள்ளது.

ஈழத்திலே பண்டுதொட்டு பல்வேறு தெய்வங்களுக்கும் கோவில் அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர். ஆயினும் ஆஞ்சநேயசுவாமிகளுடைய ஆலயம் அண்மைக் காலம்வரை அருகியே காணப்பட்டது. தற்காலத்தில் அருளும் புகழும்கொண்ட மிகப்பெரிய ஆஞ்சநேய ஆலயங்கள், ஈழமெங்கும் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றாக மலையகத்திலே ரம்பொட பிரதேசத்திலுள்ள வேவண்டன் மலை உச்சியலுள்ள, அளப்பெருங்கருணையும், தனிப்பெரும் ஆற்றலும்கொண்ட ஆஞ்சநேயர்சுவாமியின் ஆலயம் காணப்படுகின்றது. ஸ்ரீஇராமபிரான், சீதாப்பிராட்டி ஆகியோரின் முழு அன்புக்கும் பாத்திரமானவர் அனுமன் என்றழைக்கப்படும் ஸ்ரீஆஞ்சநேயசுவாமிகள், கலியுகத்தில் பக்தர்களின் குறையைத் தீர்ப்பவராக இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்.

*வளரும்...*



# இந்தி மொழியில் வெளியாகும் சூர்யாவின் "சூரரை போற்று"




சூர்யா நடித்து முவுவு தளத்தில் மிகபிரமாண்ட வெற்றி பெற்ற படம், 2D entrainment "சூரரை போற்று". இத்திரைப்படம் முதல் முறையாக Amazon Prime நிறுவனம் மூலம் இந்தி மொழியில் மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறார்கள்.

சூர்யா நடிப்பில், மிக பிரமாண்ட தயாரிப்பாக கடந்தாண்டு Amazon Prime ல் வெளியான திரைப்படம் "சூரரை போற்று". நட்சத்திர அந்தஸ்து கொண்ட, பிரபல முன்னணி நடிகர் நடிப்பில் டிஜிட்டலில் நேரடியாக வெளியான முதல் படமாக இப்படம் சாதனை படைத்தது.

இயக்குநர் சுதா கொங்குரா இயக்கத்தில், சூர்யா மாறுமட்ட வேடத்தில் நடிக்க, இந்திய விமானதுறையில் சாதனை படைத்த கோபிநாத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மையப்படுத்தி உருவான படம் தான் "சூரரை போற்று". கதை சொல்லல், காட்சியமைப்பு, நடிப்பு, இசை, ஒளிப்பதிவு என அனைத்து துறைகளிலும் பிரமாதப்படுத்தியிருந்தது. எதார்த்த நடிப்பால் அனைவரையும் கவர்ந்திருந்தார் சூர்யா. விமர்சகர்களிடமும் இப்படம் பெரும் வரவேற்பை பெற்றது. டிஜிட்டலில் அதிகம் பேரால் பார்க்கப்பட்ட தென்னிந்திய திரைப்படமாக சாதனை படைத்தது.

Amazon Prime ல் வெளியான இப்படம் உலக அளவில் பார்வையாளர்களை ஈர்த்து, பல திரை விழாக்களிலும் பங்கு கொண்டது. உலக அளவில் மதிக்கப்படும் உயரிய விருதான ஆஸ்கர் விருதுக்கான தேர்வில் இப்படம் இடம்பிடித்து சாதனை படைத்தது. தென்னிந்தியாவிலும் உலக அளவிலும்

கிடைத்த வரவேற்பினை அடுத்து, Amazon Prime நிறுவனம் இப்படத்தினை இந்தி மொழியில் மொழிமாற்றம் செய்து, வரும் ஏப்ரல் 4ஆம் தேதி தனது தளத்தில் வெளியிடுகிறது. Amazon Prime தளத்தில் முதல் முறையாக ஒரு தமிழ் படம் இந்தி மொழியில் மொழிமாற்றம் செய்து வெளியாவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடதக்கது.

மக்கள் தொட்ர்பு: ஜான்சன்.

ஜீவன் முக்தி (பகுதி) 111

# உங்கள் உணர்வு நிலையை மாற்றுவதுதான் தீர்வு



எந்த உணர்வில் நாம் இருக்கிறோமோ, அந்த உணர்வு சம்பந்தப்பட்ட பொருள்தான் நம்மை ஈர்க்கும், நம்மை நிறைக்கும், நம்மை பூரணமாக்கும்.

அதற்காக உங்கள் கனவுகளையும், கற்பனைகளையும் கீழே போட்டு விடுங்கள் என்று சொல்லவில்லை.

கீழே போடுங்கள் என்று சொன்னால், அதனோடு சண்டை போட்டுக்கொண்டு, அதனோடு போராடி வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள்.

பல நேரத்தில் பார்த்தீர்களென்றால், சண்டை போடுவதற்காகவே ஏதோ ஒன்றுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள். அதனோடு சண்டை போடுகின்ற சுகத்திற்காகவே, காமக் கற்பனைகளோடு, வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

ஒன்றுமிலலை, நீங்கள் கனவில் புலி வருவதுபோல் பார்த்துக் கொண்டு இருந்தீர்களென்றால், உங்களைப் புலியோடு சண்டை போடுங்கள் என்று சொல்லவில்லை. புலியைப் பார்த்துப் பயந்து ஒடுங்கள் என்றும் சொல்லவில்லை. உங்களைத் தூக்கத்தில் இருந்து எழும்பிவிடுகிறோம். அவ்வளவுதான்.

புலியைப் பார்த்துச் சண்டை போடுவதும் தீர்வாகாது. புலியைப் பார்த்துச் பயந்து ஓடுவதும் தீர்வாகாது. விழித்துக் கொள்வதுதான் தீர்வு. அதற்காக உங்கள் கனவுகளையும், கற்பனைகளையும் கீழே போட்டு விடுங்கள் என்று சொல்லவில்லை.

எந்த உணர்விலே உங்கள் உணர்வு ஆழமாகிவிட்டதோ, அதை நோக்கியே வாழ்க்கை சென்றுகொண்டிருக்கும்.

நீங்கள் பொருளோடு சண்டை போடுவதோ, கனவோடு சண்டை போடுவதோ, உறவுகளோடு சண்டை போடுவதோ தீர்வாகாது.

ஏன், உங்களோடு சண்டைபோடுவது கூட, தீர்வளிக்காது. சண்டையிடும் உணர்வை மாற்றினால் போதும். உணர்வை மாற்றினால் விழித்துக் கொள்வீர்கள். விழித்துக் கொள்வதே தீர்வைத்தரும்.

----------

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம்: நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது.. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

*பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER
Pandit: Kumara swamy

Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி, நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம், காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
100% SATISFACTION GUARANTEED
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775
2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,
UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# முதலாம் ஆண்டு நினைவு தினம்

## அமரர் சுப்பையா தனபாலசிங்கம் (SHORT BALA)



உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், ஜேர்மனி, கனடா (அல்பேட்டா)வை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பையா தனபாலசிங்கம் (SHORT BALA) அவர்கள் இறைவனடி சேர்ந்து ஆண்டு ஒன்று கடந்தாலும் அன்னாரை நினைவு கூறும் வேளையில், அன்னார் விடுதலை போராட்ட ஆரம்பகால உறுப்பினர் என்பதையும் நினைவு கூர்கின்றோம்.

தோற்றம் 05:07:1939 மறைவு 03:04:2020

**உரும்பிராய் மக்கள் (கனடா)**


## Carefirst Family Health Team

### புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

Accredited with Commendation — Accreditation Agrément Canada

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com












# உதயன்




உதயம் 1304 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 2, 2021

# 6 Councillors of City of Markham join together to build a Monument for Tamils who were killed by the SriLankan Government

# இலங்கை அரசின் தமிழர் படுகொலையின் ஞாபகார்த்த சின்னம் அமைக்க ஒன்றாக இணைந்துள்ள மார்க்கம் நகரசபையின் ஆறு கவுன்சிலர்கள்



கனடாவில் உள்ள மார்க்கம் நகரசபையானது பல்வேறு வழிகளில் தமிழர் நலன் காக்கவும், தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யவும் பல வழிகளிலும் கடந்த பல ஆண்டுகளாக துணையாக உள்ளது. குறிப்பாக தமிழர் மரபுரிமை நாளை முதன் முதலாக அங்கீகரித்து அதனை வருடாந்தம் கொண்டாடியும் வருகின்றது. இதே போன்று அண்மையில் முன்னாள் நகரசபை அங்கத்தவரும் தற்போதைய மாகாண அரசின் உறுப்பினருமான திரு லோகன் கணபதியின் அயராத முயற்சியின் பலனாக மேற்படி மார்க்கம் நகரசபையானது 'வன்னி வீதி" என்னும் பெயரை நகரசபையின் எல்லைக்குள்ள உள்ள வீதி ஒன்றுக்கு சூட்டிய தமிழர்களின் வன்னி மண்ணுக்கு புகழாரம் சூட்டியது.

இந்த வரிசையில், அண்மைக்காலமாக உலகெங்கும் பேசப்பட்டுவரும் இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மற்றும் தமிழர் மீதான படுகொலைகள் ஆகியவை தொடர்பாகவும் மார்க்கம் நகரசபையின் அங்கத்தவர்கள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இலங்கை அரசின் இனப்படுகொலைகள் தொடர்பாக அறிந்து கொள்வதில் மிகவும் ஆர்வம் காட்டியும் வருகின்றார்கள்.

குறிப்பாக மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார அங்கத்தவரான **Usman** மற்றும் பிராந்திய கவுன்சிலரான **Jim Jones** மற்றும் ஆகியோர் உட்பட ஏனைய நான்கு கவுன்சிலர்களான, **Joe li, Amanda Colluchi, Isa Li Councillor Ho** ஆகியோர் இணைந்து இந்த முயற்சியில் இணைந்து அண்மையில் மார்க்கம் நகரசபையில் இதற்கான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து அதன் முதலாவது வாசிப்பை நிகழ்த்தினார்கள். இதற்கு தற்போதைய மார்க்கம் நகரசபையின் மேயர் அவர்களும் தனது முழு ஆதரவையும் வழங்குவதாக அறிவித்துள்ளார்.

இந்த இனப்படுகொலை ஞாபகார்த்த நினைவுத்தூபியை மார்க்கம் நகர சபையின் எல்லைக்குள் அமைக்கும் போது, அந்த சபையின் எல்லைக்கும் வசிக்கும் ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல, கனடாவிலும் அமெரிக்காவிலும் வசிக்கும் தமிழ் மக்களும் இந்த நினைவுத் தூபியை நேரில் கண்டு இலங்கை அரசினால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி தமிழ் மக்களை என்று நினைவிற் கொள்வதற்கு சான்றாக விளங்கும் என்றும் மேற்படி கவுன்சிலர்களின் சார்பின் கனடா உதயன் ஊடகத்திற்கு தகவல் தந்த திருமதி மேர்லின் தெரிவித்தார்.

மேற்படி தீர்மானத்தை மார்க்கம் நகரசபையில் அங்கீகரிப்பதற்கு குறைந்தது 8 கவுன்சிலர்களின் ஆதரவு தேவை என்றும் திருமதி மேர்லின் மேலும் தெரிவித்தார்.

***Thank you to Councillor Khalid Usman, Regional councillor Jim Jones, Regional councillor Joe li, Councillor Amanda Colluchi, Councillor Isa Li and Councillor Ho for supporting the Tamil Community.***

## கனடா வரும் தடுப்பூசிகளின் மேலுறையில் கூடுதல் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளன

### சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்



உலகளவில் இராஜதந்திர உறவுகள் பல மட்டங்களில் பல வகைகளில் கையாளப்படுவது வழக்கம். அது விளையாட்டின் மூலம், கலை கலாச்சாரக் குழுக்களின் பயணங்கள் மூலம், மக்களின் நேரடித் தொடர்புகள் மூலம் என்று அரசியல் நிலவரங்களுக்கு ஏற்ப முன்னெடுக்கப்படும். இது ஆங்கிலத்தில் 'பின்வாசல் இராஜதந்திரம்' என்றழைக்கப்படுகிறது.

(உள்ளே 6ம் பக்கத்தில் விபரமான செய்தி)

## யாழ்ப்பாண மாநகர சபை மேயர் உட்பட 30 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளார்களாம்



கொரோனா கட்டுப்பாடு தொடர்பில் தற்போதைய அணுகுமுறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென யாழ்.மாநகர சபை மேயர் மணிவண்ணன் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளதாகு எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தற்போது தனிமைப்படுத்தல் நிலையிலுள்ள மேயர் மணிவண்ணன் கூறியுள்ளவை வருமாறு:

கொரோனா கட்டுப்பாடு தொடர்பிலான தற்போதைய அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணுகின்றேன். தற்போது நான், ஆணையாளர், பிரதி ஆணையாளர், செயலாளர், பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர் என சுமார் 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாநகர சபையின் செயற்பாடுகளும் தேக்கமடைந்துள்ளன. இது தொடர்பில் எனது பணிகளை மீண்டும் ஆரம்பித்ததும் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாட விரும்புகின்றேன்.

யாழ் நகரில் சடுதியாக ஏற்பட்ட கொரோனா பரவலை அடுத்து மாநகரத்தில் பல நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதனால் வர்த்தகர்களும் பொது மக்களும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். இதனை தொடர்ந்து வர்த்தகர்களிடமிருந்து 1000 இற்கும் மேற்பட்ட பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்ட நிலையில் இவற்றின் முடிவுகள் என்னும் வெளியிடப்படவில்லை. இவை தொடர்பில் பல முறைப்பாடுகள் வர்த்தகர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் எனக்கு தெரியப்படுத்தப்பட்டதை தொடர்ந்து நான் பொது சுகாதார வைத்திய அதிகாரியுடன் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்ந்தேன். குறித்த பரிசோதனைகள் கொழும்பில் மேற்கொள்ளப்படுவதால் அதன் முடிவுகள் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டது என்றும் பெரும்பாலும் அம் முடிவுகள் இன்று கிடைக்கப்பெறலாம் என்று அறியக்கிடைத்துள்ளது. உறுதிப்படுத்தப்படாது கிடைத்த தகவலின்படி 10மூ இற்கும் குறைவானவர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக அறியக்கிடைக்கின்றது. விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும். மேலும் புது வருடம் அண்மிக்கின்ற நிலையில் விரைந்து வர்த்தக நிலையங்களை திறக்க வேண்டும் என்ற எனது கரிசனையை வெளிப்படுத்தினேன். குறித்த விடயம் தொடர்பில் இன்று நடைபெற உள்ள அவசர கலந்துரையாடலில் எனது கருத்தை வலியுறுத்துமாறு சுகாதார வைத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கனடாவில் தமிழ்ச் சமூகத்துக்கான சிறப்பு தடுப்பூசி முகாம்




### Tamil Community Pop-up Vaccine Clinic in Canada

கனடாவின் ஸ்காபுறோ நகரில் தமிழ் மக்களின் நலன் கருதி ஒரு விசேட தடுப்பூசி முகாம் தமிழ் பேசும் வைத்திய அதிகாரிகளினால் நடத்தப்பெறுகின்றது.. இதில் பங்கு கொண்டு பலன் பெறுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு 19ம் பக்கம் பார்க்கவும்.